# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: XI இதழ்: 6 | டிசம்பர் 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ. 20/-

Vol.: XI Issue: 6 | December 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20



மனதுக்கு மரியாதை

- ஆசிரியர் கடிதம்

கணவன் - மனைவி உறவில் மகிழ்ச்சி தொடர!

பட்டா வாங்குவது எப்படி?

பக்க விளைவுகளை ஏற்படுத்தும் பருவகால மாற்றங்கள்!

செரிமான சிக்கலை சரி செய்வது எப்படி?

## அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துமா அண்ணாமலையின் வருகை!

# PREVENT FROM WINTER SEASON!

The winter season starts at around November and goes on till February. The winter season happens because of the inclination of the Northern hemisphere away from the sun. Hence, because of this, the sun rays have to travel greater distance to reach Earth. It is truly a magical season when the weather gets colder and the mercury drops, people take out their winter clothes, light fireplaces and enjoy hot chocolate around it. The vegetables in the winter season are much more fresh and taste better. People enjoy the warm rays of sun.

The winter season brings with it a few challenges and health-related risks, especially for the elderly. We are here to present you with a list of tips and best practices so you can make certain that you avoid common cold weather-related problems this winter.

Stay warm by adequate layers of clothing and use of heating appliances.

Stay active. Cold weather often keeps us indoors and limits physical exercise. This is associated with bone loss. Handy exercises indoors can prevent bone loss Stay hydrated. Cold weather often decreases thirst and elders tend to take less fluid. We need to ensure that they are taking enough fluids.

Proper foot wears to prevent falls which can be dangerous in elderly and cause hip and spine fracture.

Winter depression can be prevented by communicating with the elderly regularly. Nutritious diet - A proper diet with good vitamin D is essential for maintenance of proper health.

Elders are generally encouraged to utilise heat radiators to manage their ambient temperature, dress in layers of heavy woolens, or stay inside during particularly cold weather since as we age, our bodies become poorer at withstanding low temperatures.

For the body to work smoothly and properly, it is crucial to keep it active in addition to keeping it warm. Winters are the best season for extended bedtimes, but exercise and physical activity will help you sweat and remove toxins while maintaining healthy skin.



Since the first parts of the body to feel cold are the fingers, earlobes, toes, and tip of the nose, it is advisable to wear gloves and warm hats to protect your head, ears, and hands from the elements. Before settling in under additional covers, put on socks and a pajama with two layers.

While many of us view water as our adversary during the winter, it is necessary to keep the body hydrated. The dryness might draw water from the body because the air already lacks moisture. Moisturizer can also be used to maintain healthy skin.

Throughout the year, a lot of us crave something sweet after every meal, and this propensity grows dramatically during the winter, which can raise blood sugar levels and lead to issues.

Winter is a time when many people get drowsy and lazy, especially the elderly. However, it's crucial to resist the impulse to lay in bed all day and instead stay active.

Anyone's health can be impacted by spending a lot of time outside in this chilly weather, not only the elderly.

As sunlight is the finest source of vitamin D, get as much sun as you can. Although it could be tempting, warming up and toasting yourself might wake you up.



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

ஆசிரியர் கடிதம்

# மனதுக்கு மரியாதை!

அன்புடையீர் வணக்கம்!

ஒவ்வொரு மனிதரும் தன்னை மற்றவர் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது சரிதான். அதற்கு முன்னதாக நம்மை நாம் மதிக்கிற அளவுக்கு மாற்றிக் கொண்டு இருக்கிறோமா என்பதுதான் நம் முன்னே உள்ள கேள்வி. நம் மனதுக்கு நாம் மரியாதை தந்தால் தான் மற்றவர்களால் மதிக்கிற அளவுக்கு நாம் மாற்றப் படுவோம் என்பதை உணர்வோம்.

இன்றைய சூழலில் நம் மனதை பாதிக்கின்ற சம்பவங்கள் தான் நம்மைச் சுற்றி நடக்கின்றன அது நம்முடைய உறவுகளிடம், நண்பர்களிடம், பொதுவெளியில், தொலைக்காட்சியில், திரைக்காட்சியில் ஏற்படுகின்ற பாதிப்புகள் நம் மனதை அதிக அளவில் பாதித்து உடலையும் பாதிக்கிறது. எனவே நம்முடைய மனதை சரியாக கையாண்டால் இன்னும் சரியாக சொல்வதானால் உறுதியாக கையாண்டால் நம்முடைய வாழ்க்கையில் எந்த பிரச்சனையும் உடல் ரீதியாக மனரீதியாக வர வாய்ப்பு இல்லை.

நேர்மறை எண்ணங்கள் கொண்டவர்களாக இருங்கள். ஒரு செயலை துவங்கும் போது அது நன்றாக நடைபெறும் என்ற மனநிலையை முதலில் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் அது நடக்குமா, நடந்தால் நன்றாக நடக்குமா, நன்றாக நடந்தால் பலன் கிடைக்குமா, அந்தப் பலனை நான் மட்டுமே அனுபவிக்க வேண்டுமா மற்றவர்களுக்கு தர வேண்டுமா என்பன போன்ற எதிர்மறையான சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளாமல் எடுக்கின்ற காரியத்தை முடிக்கின்ற வகையில் நேர்மறை எண்ணங்களை கொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியான மனநிலை கொண்டவராக இருங்கள். இந்த உலகில் மற்றவர் மகிழ்ச்சியை சீர்குலைப்பது தான் தங்கள் லட்சியமாக சிலர் கொண்டிருக்கிறார்கள் எனவே அவரிடத்தில் கவனமாக இருந்து உங்கள் மகிழ்ச்சிக்கு குறைவு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியான மனநிலையே அடுத்த கட்டத்துக்கு ஒருவரை நகர்த்தி சொல்லும் என்பது உண்மை.

ஒவ்வொரு மனிதரையும் மரியாதையாக நடத்துங்கள். எந்த சூழ்நிலையிலும் யார் குறித்தும் தவறாக எண்ணி அவர்களை மரியாதை குறைவாக நடத்தாதீர்கள். உண்மையானவர்களை நாம் மதிக்க தவறினால் ,நாமும் ஒரு நாள் மற்றவர்களால் அவமானப்படுத்தப் படுகின்ற சூழல் உருவாகும்.




இலட்சிவாதியாக இருங்கள். வந்தோம் வாழ்ந்தோம் சென்றோம் என்றில்லாமல் வாழும் போதே அடுத்தவரை மதித்து அடுத்தவரால் மதிக்கப்பட்டு வாழ வேண்டும் என்ற லட்சியத்தோடு வாழ்வதுதான் வாழ்க்கை.

அடுத்தவர் நலன் மீது அக்கறை கொள்ளுங்கள். தன்னைப் போல பிறரை என்னும் தன்மை வேண்டுமே அந்த தன்மை

வர உள்ளத்திலே உண்மை வேண்டுமே என்ற கண்ணதாசன் பாடலை மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

ஊக்குவிப்பராக இருங்கள். உழைக்க வேண்டும் என்று சாதிக்கத் துடிப்பவர்களுக்கு உங்களால் முடிந்த ஊக்கத்தை தர தவறாதீர்கள். பிறருக்கு உதவுங்கள். உண்மையிலேயே உதவி தேவை யானவர்களுக்கு மட்டுமே உதவி செய்யுங்கள். மற்றவர்கள் சொன்னதற்காகவோ அல்லது சொல்லிவிட்டோமே என்பதற்காகவோ உதவி செய்யாதீர்கள் ஏனென்றால் திருவள்ளுவர் தன்னுடைய குறளில்,ஒருவரின் பண்பை அறியாமல் அவருக்கு உதவி செய்வதிலும் தவறு இருக்கிறது என்று சுட்டிக் காட்டி இருக்கிறார்.

நாம் நமக்கென்று வாழ்வது பிறருக்காக ஓடி ஓடி உழைத்து நாம் களைத்து நிற்கிற பொழுது உங்களுக்கென்று கனவுகளுடன் லாழுங்கள். வாக்குறுதிகளை காப்பாற்றுங்கள்.

காப்பாற்றக்கூடிய நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளை மட்டுமே கொடுங்கள். நம்முடைய தகுதிக்கு மீறி அல்லது நம்முடைய எதிரில் இருப்பவர்கள் தகுதி அறியாமல் வாக்கு தந்து விட்டு சங்கடப்பட வேண்டாம்.

உடலையும் மனதையும் ஆரோக் கியமாக வைத்துக் கொள்ளுங்கள். அடுத்தவர்கள் சாப்பிட்டார்களா என்று கவலைப்படுவது ஒரு புறம் இருந்தாலும், நீங்கள் சாப்பிட்டால் தான் உங்கள் உடலுக்கு ஆரோக்கியத்துக்கு சரியாக இருக்கும் என்பதை உணர்ந்து நேரத்துக்கு சாப்பிடுங்கள். உடலுக்கு ஏற்றதை சாப்பிடுங்கள்! மீண்டும் அடுத்த ஆண்டில் சந்திப்போம். நன்றி. வணக்கம்.

- எம்.எஸ்.மூர்த்தி

# உள்ளே...




அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துமா அண்ணாமலை வருகை! 7





அதானியும், அமெரிக்காவும்! நடப்பது என்ன? 10





பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் பருவநிலை மாற்றங்கள்! 22





மழைக்காலங்களில் மின்சாதனங்கள் உபயோகத்தில் கவனம்! 29





மகளின் உலகம் அப்பா தான்! 42





வேர் இன்றி மரம் ஏது! 49



உன்னால் முடியும் பெண்ணே!

# பெண்களுக்கு தன்னம்பிக்கை தரும் பெண் பேச்சாளர்!



**பெ**ண்கள் ஏற்காத துறையே இல்லை எனலாம். தான் படித்த பாடங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை இந்த சமூகத்தில் பெண்களுக்கு அது எந்த விதத்தில் பயன் தரும் என்பதை எடுத்துச் சொல்லும் பேச்சாளர்கள் நிறைய பேர் உண்டு அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சரியாக சொல்ல வேண்டுமென்றால் நம் வீட்டுப் பெண்மணி நம்மோடு பேசும் போது எப்படி ஒரு உணர்வைத் தருமோ அதை போல முனைவர் ஜெயந்தி ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின் பேச்சை கேட்கும் போது நமக்கு ஏற்படும். குறிப்பாக பெண்கள் குடும்பத்தினர் மீதும் படிப்பின் மீதும் செய்யும் தொழிலின் மீதும் சமூகத்தின் மீதும் எப்படி அக்கறையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதை தன்னுடைய பேச்சின் மூலம் விழிப்புணர்வை தந்து அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறார் இந்த தன்னம்பிக்கை கல்வியாளர்.

சாதனை படைக்க வேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொருவருக்கும் இவரது வாழ்க்கை பயணம் வழிகாட்டியாக இருக்கும் என்பதை இவர் கடந்து வந்த பாதையை பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம்.

கல்வியாளர், எழுத்தாளர், கவிஞர், மற்றும் மொழிபெயர்ப்பாளர் என்ற பன்முகத்தன்மை கொண்டவர் இவர்.

சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து கல்வி இயலில் முதுகலைப் பட்டம் (M.Ed) பெற்றவர். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் முனைவர் பட்டம்



பெற்றவர். இந்திய நடுவண் மொழி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் செம்மொழி ஆராய்ச்சி மையத்தால் வெளியிடப்பட்ட 'குறுந்தொகை' மற்றும் திருக்குறள், பாரதியார் கவிதைகள், ஐங்குறுநூறு போன்ற நூல்களின் மொழிபெயர்ப்பு இவரது புலமையை பறைசாற்றும்.

இந்தியாவின் பல பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களுக்கு கற்பிக்கின்ற பெருமை படைத்தவர்.

2016ல் மலேசியா நாட்டில் இவர் மேற்கொண்ட இருபது (20) நாட்கள் பயணம் அங்கு வாழும் தமிழ் இன ஆசிரியர்களையும் மாணவர்களையும் பெற்றோரையும் பெண்களையும் ஊக்கப்படுத்துவதை மையமாகக் கொண்டிருந்தது.

2016 சிங்கப்பூரில் நடைபெற்ற கவிமாலை நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக பங்கு பெற்றவர். மேலும் 2017 மார்ச் மாதம் தேதியில் சிங்கப்பூரில் நடந்த டாக்டர் ஏ.பி. ஜெ. அப்துல் கலாம் அவர்களின் முதலாமாண்டு நினைவுச் சொற்பொழிவினை ஆங்கிலத்தில் நிகழ்த்தியவர்.

இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் அழைப்பின் பேரில் அக்டோபர் 2, 2016 அன்று உலக

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 11 டிசம்பர் 2024 டைம்ஸ்-6

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
**கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
**எஸ்.ரங்கராஜு**
8428977788

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுசுந்தினா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com




அகிம்சை தினத்தை முன்னிட்டு சர்வ மத மக்களிடையே உலக அமைதி குறித்து Gandhiji - the Apostle of Peace என்கிற தலைப்பில் உரையாற்றியவர்.

இலங்கையின் வடமாகாணத்தில் 20 நாட்கள் அவர் மேற்கொண்ட நெடும் பயணத்தில் போரால் பாதிக்கப்பட்ட 10,000 மக்களை 22 பேச்சரங்கங்களில் சந்தித்தவர். இவர்களில் பள்ளி மாணவர்களும் 3000 விதவைப் பெண்களும் அடங்குவர். 2015 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் இவர் மேற்கொண்ட இரண்டு கனடா நாட்டுப் பயணங்களும் அங்கு வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களின் தொழில்சார் அமைப்பின்–BISTHA - Business Tamil Conference- அழைப்பின் பேரில் மேற்கொள்ளப் பட்டவையாகும்.

மேலும் குவைத் மற்றும் செஷல்ஸ் நாடுகளுக்கு அங்கு வாழும் தமிழர்களின் அழைப்பை ஏற்று சென்று வந்துள்ளார்.

'மனதில் உறுதி வேண்டும்' என்ற இவரது 330 க்கும் மேற்பட்ட தொலைக்காட்சித் தொடர் உரை நிகழ்ச்சி மனநலம் மிகுந்த சமுதாயத்தினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள ஒரு முயற்சி.

2018 ஜனவரி மாதம் இந்திய தூதரகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் இலங்கையின் வடமாகானங்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் 15 நாட்கள் பயணம் மேற்கொண்டார். அப்பொழுது பல மேடைகளில்மாணவர்களையும் நேர்ப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார்.

2018ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்த் நாடுகளில் ஒருமாத காலம் சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள தமிழ் மக்களையும் மாணவர்களையும் குறிப்பாக மனச்சோர்வுக்கு ஆளாகும் பெண்களையும் 23 அமர்வுகளில் சந்தித்துள்ளார். லண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையின் துவக்க விழாவில் சிறப்புரையாற்றினார். இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்த் நாடுகளில் இரண்டாவது முறையாக 2023ல் இவரால் மேற்கொள்ளப்பட்ட ஒருமாத கால சுற்றுப்பயணம் கோவிட் நோய்க்குப்பின் இந்நாடுகளின் கல்விச்சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிந்துகொள்ளும் முயற்சியாகும்.

யாதுமானவள் என்ற நிகழ்விற்காக Rotary District 3212 வுடன் சேர்ந்து 2022 பிப்ரவரி முதல் இன்று வரை 90 அமர்வுகளில் சுமார் 1,10,000 மாணவிகளை சந்தித்துள்ளார். இவ்வளவு பெருமை வாய்ந்த ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களை புகழ் மேலும் வளரவும் அவரது ஆளுமை பெண் சமூகத்தில் மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

**- சுஜாதா மூர்த்தி**

# அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துமா அண்ணாமலை வருகை!



தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை லண்டன் செல்வதற்கு முன்பாக தமிழக அரசியல் களத்தில் தினந்தோறும் அவரது பெயர் இடம்பெறாமல் இருந்ததில்லை.

அது சரியா தவறா என்ற கருத்துக்கு அப்பாற்பட்டு பா.ஜ.க பற்றி அதிகம் பேசப்பட்டு வந்ததற்கு காரணம் அண்ணாமலை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அண்ணாமலை லண்டன் போனதற்கு பிறகு இங்கே நடந்த சம்பவங்கள் அவர் திரும்பி வந்தவுடன் என்னென்ன மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதை அரசியல் ஆய்வாளர்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

எத்தனையோ சம்பவங்கள் நடந்திருந்தாலும் அவர் இல்லாத நேரத்தில் இரண்டு பெரிய முக்கிய சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

ஒன்று அவர் வெளிநாடு சென்றபோது சிறையில் இருந்த செந்தில் பாலாஜி இப்பொழுது அமைச்சராக இருக்கிறார். நடிகர் விஜய் "தமிழக வெற்றி கழகம் "என்ற கட்சியை அவர் இருக்கும் போது துவக்கினார் என்றாலும் விக்கிரவாண்டியில் மிகப்பெரிய மாநாடு நடத்தி அரசியலில் ஒரு திருப்புமுனை ஏற்படுத்தியது அவர் இல்லாத போது தான்.

இது போன்ற சம்பவங்கள் அரசியல் களத்தில் பேசப்பட்டு வந்தாலும் இனி அண்ணாமலை வந்த பிறகு அரசியல் களம் அதகளமாகும் என்று கருதப்படுகிறது.

அண்ணாமலை அவர்கள் வெளிநாடு கிளம்பிச் சென்ற பின்பு அக்கட்சியினை வழிநடத்த ஒரு குழு இதை பாஜகவின் தேசிய பொதுச் செயலாளர் அரண் சிங் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "பாஜக மாநில தலைவர் கே.அண்ணாமலை, இங்கிலாந்தில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய 3 மாதங்களுக்கு கல்வி பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்கிறார். மாநிலத் தலைவர் இல்லாத நிலையில், கட்சியின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க கட்சியின் தேசியத் தலைவர் ஜகத் பிரகாஷ் நட்டாவின் வழிகாட்டுதலின்படி குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழுவின் ஒருங்கிணைப்பாளராக தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச். ராஜா நியமிக்கப்படுகிறார். குழுவின் உறுப்பினர்களாக மாநில துணைத் தலைவர் எம். சக்கரவர்த்தி, மாநில துணைத் தலைவர் கனகசபாபதி, மாநில பொதுச் செயலாளர் எம். முருகானந்தம், மாநில பொதுச் செயலாளர் ராம. சீனிவாசன், மாநில பொருளாளர் எஸ்.ஆர். சேகர் ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார். பா.ஜ.கவின் நீண்ட நெடிய பயணத்தின் முக்கியஸ்தர்களான இவர்களால் அண்ணாமலை பா.ஜ.கவை அரசியல் அரங்கில் நிறுத்தியதை போல் நிறுத்தினார்கள் என்றால் இல்லை என்பதே பதில்.

அவர் வெளிநாடு சென்ற போது நடந்த இன்னொரு முக்கிய நிகழ்ச்சி உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தான் வெளிநாடு இல்லாத போது தமிழகத்தின் அரசியல் நடவடிக்கைகள் அனைத்தையும் அங்கிருந்தே கவனித்து வந்ததாக அண்ணாமலை அடிக்கடி தனது அறிக்கை மூலம் சொல்லி வந்தார்.

தற்போது சென்னை திரும்பி அவர் விமான நிலையத்தில் அளித்த பேட்டி தான் அவரது அரசியல்

பரபரப்புக்கு தொடக்கப் புள்ளியாக அமைந்துவிட்டது. சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலை, "மூன்று மாதம் வெளியில் சென்று படிப்பதற்கு அருமையான வாய்ப்பு கிடைத்தது. கட்சியும் பெரிய மனது வைத்து அனுமதி வழங்கினர். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் கீழ் தான் இந்த மூன்று மாதம் படித்தேன். என் அரசியலை இன்னும் மேம்படுத்துவதற்கு இது உதவியது. இந்த மூன்று மாத காலத்தில் நிறைய அரசியல் மாற்றம் நடந்துள்ளது.

விஜய் தன் உச்சத்தை விட்டு அரசியலுக்கு வந்துள்ளார். அவரின் வருகையை நான் வரவேற்கிறேன். விஜய் திராவிட கட்சிகள் பேசும் சித்தாந்தத்தை தான் பேசுகிறார். புதிதாக எதுவும் இல்லை. விஜய்யின் கொள்கை கிட்டத்தட்ட திராவிட கட்சிகளின் கொள்கைகளை ஒத்துப்போகிறது. இதனால் யாருக்கு பாதிப்பு என்பதை மக்கள் முடிவு செய்வார்கள்.

விஜய்யை கேள்வி கேட்க வேண்டிய இடத்தில் கேள்வி கேட்போம். உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். திமுக எப்போதும் ஒரு குடும்பத்தைச் சார்ந்துள்ளது. புதிய சிந்தனைகளுக்கு அங்கு இடமில்லை. உதயநிதி நன்றாக செயல்பட்டால் பாராட்டுவோம். தவறாக செயல்பட்டால் விமர்சிப்போம் என்றார்.

அதைத்தொடர்ந்து, கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அண்ணாமலை பேசியதாவது: கடந்த மூன்று மாதங்களில் சக்சஸ்ஃபுல்லான நடிகர் அரசியலுக்கு வந்துவிட்டார். ஃபெயில்டு நடிகர் துணை முதல்வராகிவிட்டார். கோவை விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் கேட்ட முதல் கேள்வியும் அவர்களுடைய அரசியலை எப்படி பார்க்கிறீர்கள் என்றுதான். இவர்களுடைய வருகையால் சாதாரண மனிதருக்கு எந்தவொரு பயனும் இல்லை. சாதாரண மக்களுக்கு புரட்சிகரமான அரசியலை இவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களா என்றால் இல்லை.

நடிகர் விஜயின் அரசியலை நான் வரவேற்கிறேன். உச்சத்தில் இருக்கக்கூடிய நடிகர், நிறைய மக்களின் அன்பைப் பெற்றுள்ள நடிகர். நிறைய பேர் அவருடைய படங்களை ரசிக்கின்றனர். ஆனால், அரசியல் பரிமாணம் என்பது வேறு. அரசியல் என்பது முழுமையான வேறு களம். ஆனால் அவர் வர வேண்டும். அரசியல் களமாடட்டும் பார்ப்போம்.

அதேநேரத்தில், உதயநிதியின் அரசியலை வேறு விதமாகப் பார்க்கிறேன். அதனை மக்கள் பார்க்கிறார்கள். யாரை துணை முதல்வராக்க வேண்டும்



என்பது அவர்களுடைய கட்சியின் உரிமை. இந்தக் கூட்டத்தில் அரசியல் பற்றி முழுமையாகப் பேசினால் தப்பாக போய்விடும். இன்று மக்களுக்கு பயன்படக்கூடிய அரசியலை நாம் பேசுவது இல்லை.


ஒரு ஸ்டெர்லைட் மூடியதால் காப்பர் ஏற்றுமதி செய்து கொண்டிருந்த நாடு, இப்போது இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. ஒரு ஸ்டெர்லைட் ஆலையை மூடியதால் மேலைநாட்டில் இருந்து காப்பரை வாங்கும் நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. அப்போது, ஜியோ பாலிடிக்ஸில் இந்தியாவிற்கு சர்வதேச அரசியலில் என்ன பிரச்னை ஏற்படும் என்பதை சாதாரண மனிதர்கள் புரிந்து கொண்டால். இதனை வைத்துகொண்டால். இதனை வைத்து அரசியலே செய்ய முடியாது.

சாலை போட்டால் எதிர்ப்பு என ஒவ்வொரு விஷயத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. அதில் சில பிரச்னைகளும் இருக்கிறது ஒப்புக் கொள்கிறேன். அதே நேரத்தில் கண்டிப்பாக அதில் நல்ல விஷயங்களும் உள்ளது. இதைப் பக்குவமாக எடுத்துச் செல்லக்கூடிய அரசியல்வாதிகள் இல்லை. நல்லதும் உள்ளது கெட்டதும் உள்ளது. கிராமத்தில் கமிட்டி போட்டு எடுத்து சொல்ல வேண்டும்.

சுகாதாரம், சுற்றுச்சூழல் பிரச்னைகள் கையாளுவது, வேலைவாய்ப்பு போன்றவற்றை சொல்ல வேண்டும். மிடில் கிளாஸ் மக்கள் குரலை உயர்த்தி கேள்வி எழுப்ப வேண்டும். இல்லையென்றால் எதற்கெடுத்தாலும் எதிர்ப்புதான் வரும் என்று பேசினார்.அண்ணாமலையின் பேச்சு அரசியல் மாற்றத்தின் தொடக்கம் என்று அக்கட்சியினர் பெருமையாக பேசி வருகிறார்கள்.

# பாம்பன் பாலம் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்:

## மதுரை எம்.பி. சு. வெங்கடேசன் வலியுறுத்தல்!



தமிழ்நாட்டின் தென் கிழக்குப் பகுதியான இராமேஸ்வரத்தில் மிகவும் புகழ் வாய்ந்தது பாம்பன் பாலம் ஆகும்.

இதுவொரு கடல்வழியாக அமைக்கப்பட்ட தொடர் வண்டி பாலமாகும். இந்தப் பாலம் இந்திய பெருநிலப்பரப்பையும் இராமேஸ்வரம் தீவையும் இணைக்கின்றது. கப்பல் வரும்போது பாலம் மேலெழுவதும், பின்னர் ஒன்று சேர்வதும் குறிப்பிட வேண்டிய விஷயம். 1914 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த கடல் பாலத்தில், கப்பல்கள் செல்வதற்கு ஏதுவாக பாலதின் நடுவில் திறக்கும் கத்திரி வடிவ தூக்குகள் அமைந்துள்ளன.

இதுவே இந்தியாவின் முதல் கடல் பாலம் ஆகும். 2010 ஆம் ஆண்டு மும்பையில் உள்ள பாந்திராவொர்லி கடற்பாலம் திறப்பதற்கு முன்பு வரை இது இந்தியாவின் மிக நீளமான கடல் பாலமாக இருந்தது.

பாம்பன் தொடர் வண்டி பாலத்திற்கு அருகில் 1988 ஆம் ஆண்டு ஒரு சாலை போக்குவரத்துப் பாலம் திறக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில், தற்போதுள்ள பாலத்திற்கு அருகில் ஒரு புதிய பாலத்தை கட்டும் பணி தொடங்கியது. 2022 ஆம் ஆண்டு டிசம்பரில், கடல் அரிப்பின் காரணமாக இந்தப் பாலம் பலவீனமடைந்ததால், பாலத்தின் மீது தொடர் வண்டி போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. பாம்பனில் புதிய ரெயில்வே பாலம் கட்ட ரெயில்வே அமைச்சகம் முடிவு செய்தது. இதையடுத்து சுமார் 2 கி.மீ. தூரம் ரூ.535 கோடி செலவில் ரெயில் விகாஸ் நிகம் லிமிடெட் நிறுவனம் கட்டுமான பணியை தொடங்கியது.

கடலின் நடுவே 101 தூண்கள் கட்டப்பட்டு செங்குத்தாக லிப்ட் முறையில் பாலம் வடிவமைக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாலத்தை ஆய்வு செய்த தெற்கு ரெயில்வே பாதுகாப்பு துறை ஆணையர் சவுத்ரி இந்திய ரெயில்வே வாரிய செயலாளருக்கு ஒரு ஆய்வறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.



அந்த அறிக்கையில் பாலம் சிறு தொழில்நுட்பக் கோளாறுகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பாலத்தில் கடல் நீர் அரிப்பு பிரச்சினையைத் தீர்க்க முறையான நடவடிக்கை இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. தூண்களில் தற்போதே அரிப்பு ஏற்பட தொடங்கி உள்ளதாகவும், சோதனை ஓட்டத்தில் தண்டவாளத்தில் ஒலி அதிகமாக உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

புதிய ரெயில் பாலத்தில் உள்ள குறைபாடுகளை முழுமையாக மாறு ஆய்வு செய்து சரிசெய்ய வேண்டும் எனவும் ஆய்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கை பொதுமக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், பாம்பன் பாலம் திட்டத்தில் நிகழ்ந்துள்ள மோசடி குறித்து ரெயில்வே அமைச்சர் பதில் அளிக்க வேண்டும் என்று சு.வெங்கடேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார். பாம்பன் புதிய ரயில்வே பாலம் கட்டுமானத்தில் நடந்துள்ள மோசடியை ரயில்வே பாதுகாப்பு ஆணையரே கடுமையாக விமர்சித்து இருக்கிறார். உதாரணமாக, தூக்குப் பாலம் பகுதி ரயில்வேயின் ஆராய்ச்சி வடிவம், தர நிர்ணய அமைப்பின் எந்தவிதமான ஒப்புதலும் இல்லாமல், வேறு வடிவமைப்பு விதிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு இருக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

ரயில்வே வாரியத்தின் ஆதரவோடு ஆர்டிஎஸ்ஓ தன் கடமையை கைவிட்டுள்ளது வேதனைக்கு உரியது.

இந்தப் பாலத்தை கட்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ரயில்வே வாரியம் தனது சொந்த நடைமுறை விதிகளை மீறுவது மிகவும் ஆபத்தானது என பாதுகாப்பு ஆணையர் கண்டித்துள்ளார். இது மட்டுமன்றி, பாலத்துக்கான இரும்புப் படிமங்கள்கூட ஆர்டிஎஸ்ஓவை கலந்தாலோசிக்காமல் கட்டப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வே வாரியம் தமிழகத்தின் பாரம்பரியமிக்க வழித்தடத்தில் பாம்பன் பாலத்தை பாதுகாப்பு விதிகளை புறக்கணித்துக் கட்டியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ரயில்வே அமைச்சகம் எப்படி இதற்கு அனுமதியளித்தது என்பதை அமைச்சர் நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

# அதானியும், அமெரிக்காவும்! நடப்பது என்ன?



இந்தியாவின் முக்கியத் தொழிலதிபரும், இரண்டாவது பெரும் பணக்காரருமான கவுதம் அதானி மீது லஞ்சம் வழங்குதல், மோசடியில் ஈடுபடுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை அமெரிக்கா முன்வைத்து இருப்பது பெரும் புயலைக் கிளப்பியிருக்கிறது.

அதானி குழும நிறுவனங்களின் தலைவர் கவுதம் அதானி. 62 வயதான இவர், உலக பணக்காரர் பட்டியலில் 17வது இடத்திலும், இந்திய அளவில் 2வது இடத்திலும் உள்ளார்.

இந்த நிலையில், கவுதம் அதானி மற்றும் அவரது உறவினரும், அதானி கிரீன் எனர்ஜி செயல் இயக்குநருமான சாகர் அதானி, முன்னாள் சிஇஓ வினீத் ஜெயின் உள்ளிட்ட 7 பேர் மீது லஞ்சம் மற்றும் கடன் பத்திர மோசடி தொடர்பான தனித்தனி வழக்குகளில் அமெரிக்காவின் நியூயார்க் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

202024 காலகட்டத்தில் அதிக விலைக்கு சூரிய ஒளி (சோலார்) மின்சாரம் வாங்கும் வகையில் விநியோக ஒப்பந்தங்களை பெறுவதற்காக தமிழகம், ஆந்திரா, ஜம்மு காஷ்மீர், சத்தீஸ்கர், ஒடிசா மாநிலங்களில் அரசு அதிகாரிகளுக்கு அதானி குழுமம் ரூ.2,100 கோடி லஞ்சம் கொடுத்ததாகவும், இதை மறைத்து அமெரிக்க நிறுவனங்களிடம் முதலீடு பெற்றதாகவும் அதானி குழுமம் மீது நியூயார்க்கில் உள்ள புரூக்ளின் பெடரல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் முறைகேடாக பெற்ற இந்த ஒப்பந்தங்கள் மூலம் 20 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 2 பில்லியன் டாலருக்கும் (சுமார் ரூ.17,000 கோடி) அதிகமான லாபத்தை ஈட்ட முடியும் என்று குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விநியோக ஒப்பந்தங்களை பெறுவதற்காக இந்திய அரசின் உயர் அதிகாரிகளை கவுதம் அதானி பல முறை சந்தித்ததாகவும், அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 54 பக்க குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

லஞ்சத்தை மறைத்து பெற்ற ரூ.25,000 கோடி முதலீடு சட்டவிரோதமான லஞ்ச நடவடிக்கைகளை மறைத்து அமெரிக்காவில் அதானி நிறுவனம் 300 கோடி டாலருக்கு (ரூ.25,000 கோடி) முதலீடு பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியை தலைமையிடமாக கொண்ட அஸூர் பவர் நிறுவனமும் இந்த லஞ்ச வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்க கடன் பத்திர சட்டங்கள், விதிகளை மீறி செயல்பட்டதற்காக அமெரிக்க பங்குச் சந்தை மற்றும் பரிவர்த்தனை வாரியமும் கவுதம் அதானி, சாகர் அதானி, அஸூர் பவர் நிர்வாகிகள் மீது தனியாக குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளது.

இதையடுத்து, கவுதம் அதானி, சாகர் அதானி உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றம் பிடிவாரன்ட் பிறப்பித்துள்ளது.

இது, சர்வதேச சட்ட அமலாக்க துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அமெரிக்க நீதித்துறை வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். சர்வதேச சட்ட அமலாக்கத்துறையின் பிடியில் இருந்து, அதானி மற்றும் அவரது குழுவினர் இனித் தப்பவே முடியாது என்று கூறப்படுகின்றது.

# புதிய கார் வகையை அறிமுகப்படுத்தும் டாடா நிறுவனம்!




எளிய மக்களும் பயன் அடையும் வகையில் பைக் விலைக்கே காரை வழங்கவேண்டும் என்ற தனித்துவமான நோக்கத்தோடு அறிமுகப்படுத்தப்பட்ட கார் தான் நானோ கார். இது ரத்தன் டாடாவின் கனவு கார். தற்போது இந்த கார் புதிய வடிவமைப்பில் மீண்டும் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய டாடா நானோ வடிவம் மற்றும் செயல்பாடு இரண்டையும் குறிக்கும் ஒரு முழுமையான அழகியல் மாற்றத்தைக் காட்டுகிறது. அதன் கச்சிதமான பரிமாணங்களைத் தக்கவைத்துக்கொண்டாலும், நவீன உணர்திறன்களை ஈர்க்கும் சமகால வடிவமைப்பு மொழியைக் கொண்டுள்ளது. வெளிப்புற மறுவடிவமைப்பு நகர்ப்புற நடைமுறையை வலியுறுத்துகிறது, நெரிசலான நகர வீதிகள் மற்றும் இறுக்கமான வாகன நிறுத்துமிடங்களில் சூழ்ச்சித்திறன் மீது கவனமாக கவனம் செலுத்தப்படுகிறது. நவீனமயமாக்கப்பட்ட ஹெட்லைட் வடிவமைப்பு மற்றும் புத்துணர்ச்சியூட்டப்பட்ட உடல் வடிவம் மிகவும் அதிநவீன தோற்றத்திற்கு பங்களிக்கிறது.

புதிய டாடா நானோ வடிவம் மற்றும் செயல்பாடு இரண்டையும் குறிக்கும் ஒரு முழுமையான அழகியல் மாற்றத்தைக் காட்டுகிறது. அதன் கச்சிதமான பரிமாணங்களைத் தக்கவைத்துக்கொண்டாலும், நவீன உணர்திறன்களை ஈர்க்கும் சமகால வடிவமைப்பு மொழியைக் கொண்டுள்ளது. வெளிப்புற மறுவடிவமைப்பு நகர்ப்புற நடைமுறையை வலியுறுத்துகிறது, நெரிசலான நகர வீதிகள் மற்றும் இறுக்கமான வாகன நிறுத்துமிடங்களில் சூழ்ச்சித்திறன் மீது கவனமாக கவனம் செலுத்தப்படுகிறது. நவீனமயமாக்கப்பட்ட ஹெட்லைட் வடிவமைப்பு மற்றும் புத்துணர்ச்சியூட்டப்பட்ட உடல் வடிவம் மிகவும் அதிநவீன தோற்றத்திற்கு பங்களிக்கிறது.

நவீனமயமாக்கப்பட்ட புதிய நானோ கார் 624 சிசி பெட்ரோல் என்ஜினுடன், சிறந்த செயல்திறன் மற்றும் செயல்திறனின் உகந்த சமநிலையை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மின் உற்பத்தி நிலையம் அதன் முந்தைய வடிவமைப்பில் இருந்து குறிப்பிடத்தக்க மேம்படுத்தலைக் குறிக்கிறது, விதிவிலக்கான எரிபொருள் சிக்கனத்தை பராமரிக்கும் போது மேம்படுத்தப்பட்ட மின் விநியோகத்தை வழங்குகிறது.

இந்த கார் ஒரு லிட்டருக்கு 2530 கிலோமீட்டர் என்ற ஈர்க்கக்கூடிய எரிபொருள் செயல்திறனை அடைகிறது, இது தினசரி பயணத்திற்கான சிக்கனமான தேர்வாக அமைகிறது. மணிக்கு 105 கிலோமீட்டர் வேகத்துடன், புதிய நானோ நகர்ப்புற மற்றும் நெடுஞ்சாலை பயன்பாட்டிற்காக நன்கு பொருத்தப்பட்டுள்ளது.

தோராயமாக ரூ.2.5 லட்சம் ஆரம்ப விலையுடன், புதிய நானோ இந்தியாவின் மிகவும் மலிவு விலையில் நான்கு சக்கர வாகனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த போட்டி விலை நிர்ணய உத்தி, கிடைக்கக்கூடிய EMI விருப்பங்களுடன் இணைந்து, மக்கள்தொகையின் பரந்த பிரிவினருக்கு கார் உரிமையை அணுகக்கூடியதாக ஆக்குகிறது. நவீன அம்சங்களையும் மேம்படுத்தப்பட்ட தரத்தையும் வழங்கும்போது மதிப்பை வழங்குவதில் டாடாவின் அர்ப்பணிப்பை விலை அமைப்பு பிரதிபலிக்கிறது.

புதிய நானோ முதன்முறையாக கார் வாங்குபவர்களை ஈர்க்கும் வகையில், குறிப்பாக மலிவு விலையில் நம்பகமான வாகனத்தை எதிர்பார்க்கும் நடுத்தர வர்க்க குடும்பங்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. அதன் நவீன அம்சங்கள், மேம்படுத்தப்பட்ட செயல்திறன் மற்றும் பொருளாதார செயல்பாடு ஆகியவற்றின் கலவையானது நுழைவுநிலை பிரிவில் ஒரு கவர்ச்சிகரமான முன்மொழிவை உருவாக்குகிறது. நகர்ப்புற பயணத்திற்கு இரண்டாவது வாகனத்தை நாடுபவர்களுக்கு காரின் நிலைப்படுத்தல் ஒரு சாத்தியமான விருப்பமாக அமைகிறது.

# தொலைந்த காலம் மீண்டும் வருமா?

நட்பு உடைந்து ,
முக நூலானது ...

துசுற்றம் உடைந்து ,
வாட்சப் ஆனது ...

துவாழ்த்துக்கள் உடைந்து ,
ஸ்டேட்டஸ் ஆனது ...

துஉணர்வுகள் உடைந்து ,
ஸ்மைலியாய் ஆனது ...

துகுளக்கரை உடைந்து ,
குளியலறை ஆனது ...

துநெற்களம் உடைந்து ,
கட்டடமானது ...

துகாலநிலை உடைந்து ,
வெப்பமயமானது ...

துவள நிலம் உடைந்து ,
தரிசாய் ஆனது ...

துதுணிப்பை உடைந்து ,
நெகிழியானது ...

துஅங்காடி உடைந்து
அமேசான் ஆனது ...

துவிளை நிலம் உடைந்து ,
மனை நிலம் ஆனது ...

துஒத்தையடி பாதை உடைந்து ,
எட்டு வழியானது ...

துகடிதம் உடைந்து ,
இ மெயிலானது ...

துவிளையாட்டு உடைந்து ,
வீடியோ கேம் ஆனது ...

துபுத்தகம் உடைந்து ,
இபுக் ஆனது ...

துசோறு உடைந்து
'ஓட்ஸ்'சாய்ப் போனது...

துஇட்லி உடைந்து ,
பர்கர் ஆனது ...

துதோசை உடைந்து ,
பிட்சாவானது ...

துகுடிநீர் உடைந்து
குப்பியில் ஆனது ...

துபசும்பால் உடைந்து ,
பாக்கெட் ஆனது ...

துவெற்றிலை உடைந்து ,
பீடாவானது ...

துதொலைபேசி உடைந்து ,
கைப்பேசியானது ...

துவங்கி உடைந்து ,
பே டி எம் ஆனது ...

துநூலகம் உடைந்து ,
கூகுளாய்ப் போனது ...

துபுகைப்படம் உடைந்து ,
செல்ஃபியாய் ஆனது ...

துமனிதம் உடைந்து ,
மத வெறியானது ...

துநல்ல அரசியல் உடைந்து ,
அருவெறுப்பானது ...

துபொது நலம் உடைந்து ,
சுய நலமானது ...

துபொறுமை உடைந்து ,
அவசரமானது ...

துஊடல் உடைந்து ,
விவாகரத்தானது ...

" நிரந்தரம் உடைவது நிதர்சனம்...
ஆகையால் ,
உடைவது உலகினில்
நிரந்தரமானது " ..!

எல்லாவற்றையும் இழந்து
புலம்பிக் கொண்டு
இருக்கின்றான்,
இன்றைய கால மனிதன்....

தொலைந்துபோன காலம்
மீண்டும் தொடருமா...?

**- சின்னதம்பு சுப்ரமணியம்**

# போக்கு காட்டிய பெஞ்சல் புயல்!

இதுவரை நாம் பார்த்த புயல் என்பது எப்படி இருக்கும் எப்போது கரையை கடக்கும் என்கிற ஒரு வரைமுறை இருக்கும் .ஆனால் இந்த புயல் வடிவேல் ஒரு படத்தின் ஓடும் போது இங்கும் அங்கும் ஓடுவாரே அதைப்போல போக்கு காட்டி விட்டு சில இடங்களை புரட்டி போட்டு விட்டது.

இந்தியாவில் ஏற்படும் புயல்கள் அதன் வேகத்தை பொறுத்து வரையறுக்கப்படும். இந்த நிலையில்தான் பெஞ்சல் புயல் தற்காலிக புயல் என்று வரையறுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

தற்காலிக புயல் என்றால் என்ன என்று அறியும் முன்.. புயல்கள் வகைகள் பற்றி இங்கே பார்க்கலாம்.

பொதுவாக இந்தியாவில் ஏற்படும் புயல்களின் முக்கிய வகைகள் வெப்பமண்டல சூறாவளிகள் என்று அழைக்கப்படும். இவை அதன் வேகத்தை பொறுத்து வரையறுக்கப்படுகிறது.



காற்றழுத்த தாழ்வு நிலை: மணிக்கு 31 கிலோமீட்டருக்கும் குறைவான காற்றின் வேகம் (17 நாட்ஸ்) கொண்டவை.

சென்னை, புறநகர் பகுதிகளில் நகைக் கடைகளுக்கு விடுமுறை! "

காற்றின் வேகம் மணிக்கு 31 முதல் 49 கிலோமீட்டர்கள் (17 முதல் 27 நாட்ஸ்) கொண்டவை.

சூறாவளி புயல்: காற்றின் வேகம் மணிக்கு 62 முதல் 88 கிலோமீட்டர்கள் (34 முதல் 47 நாட்ஸ்) கொண்டவை.

கடுமையான சூறாவளி புயல்: காற்றின் வேகம் மணிக்கு 89 முதல் 118 கிலோமீட்டர்கள் (48 முதல் 63 நாட்ஸ்) கொண்டவை.

மிகக் கடுமையான சூறாவளி புயல்: காற்றின் வேகம் மணிக்கு 119 முதல் 221 கிலோமீட்டர்கள் (64 முதல் 119 நாட்ஸ்)



சூப்பர் சைக்ளோனிக் புயல் அதி தீவிர புயல்: காற்றின் வேகம் மணிக்கு 221 கிலோமீட்டருக்கு மேல் (119 நாட்ஸ் மற்றும் அதற்கு மேல்) கொண்டவை.தற்காலிக புயல்: இப்படிப்பட்ட நிலையில்தான் தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள புயல் தற்காலிக புயல் என்று அறிவிக்கப்பட்டது. தற்காலிக புயல் என்றால் புயல் உருவாகி சில மணி நேரத்திற்குள் வலிமை இழக்கும் புயல் ஆகும். அதாவது தாழ்வு மண்டலம்.. புயலாக மாறி சில மணி நேரத்திற்குள் வலிமை இழந்து பின்னர் கரையை கடந்தால் அது தாற்காலிகப் புயல் ஆகும்.

ஆனால் இங்கே பெஞ் சல் புயல் வேகமாக வலிமை இழக்கும் என்று நினைத்தால்.. அப்படி ஆகாமல் வலிமை அடைந்து கொண்டே இருக்கிறது. அதோடு வேகமாக நகரவும் தொடங்கி உள்ளது. இது பேண்ட் பேண்ட் ஆக மழையை கொண்டு வருகிறது. அதாவது அலை அலையாக மேகங்கள் வர தொடங்கி உள்ளன.

ஒரு செட் மேகம் சென்றால் உடனே சில மணி நேரங்களில் அடுத்த செட் மேகம் வருகிறது. இந்த தொடர் மேகங்கள்தான் கனமழைக்கு முக்கியமான காரணமாக மாறி உள்ளன என்று வானிலை ஆய்வாளர்கள் கருத்தாய்வு செய்துள்ளார்கள்.

# ராம்கோ நிறுவனத்தின் சிறப்பான சேவை!

கோவை, ஆணைகட்டி தயானந்த சுவாமிகள் கேட்டுக் கொண்டதால் ராஜபாளையம் ராம்கோ சேர்மன் பி.ஆர். சுப்பிரமணியராஜாவும் அவரது துணைவியார் சுதர்சனமும் சேர்ந்து மலைவாழ் மக்களின் குழந்தைகள் இலவசமாக கல்வி கற்க மாணவ மாணவியருக்கான விடுதியை கடந்த 2005ம் ஆண்டு ராஜபாளையத்தில் ஆரம்பித்தனர்.

ராம்கோ பள்ளியில் படிக்கும் மலைவாழ் மக்களின் குழந்தைகள் ராம்கோ நிறுவனம் நடத்தும் கல்லூரிகளிலும் இவர்களுக்கு இலவசமாக கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

ராம்கோ சேர்மன் பி.ஆர். ராமசுப்பிரமணியராஜா மறைவிற்குப் பிறகு தற்பொழுது அவரது துணைவியார் சுதர்சனம் மற்றும் அவரது மகனும் தற்போதைய சேர்மனுமானபி.ஆர்.வெங்கட்ராமராஜா தொடர்ந்து இந்த ஜெயந்த் விடுதியை நடத்தி வருகின்றனர்.

இங்கு தங்கிப் படிக்கும் மாணவ மாணவியருக்கு உணவு உடை, மருத்துவ வசதி யோகா, நன்னெறி வகுப்புகள் உடற்பயிற்சி போன்றவைகள் இலவசமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விடுதியின் தீபாவளி கொண்டாட்டத்தில், தென்காசி மாவட்ட முதன்மை நீதிபதி ராஜவேல், தேனியைச்



சேர்ந்த மாவட்ட நீதிபதி கருணாநிதி, ராம்கோ கம்பெனி இயக்குநர் ஸ்ரீகண்டன் ராஜா, சுதர்சனம் டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரீஸ் சேர்மன் வி.பி. சந்திரன், சிந்தலைக்கரை அன்னை வெக்காளியம்மன் கோவில் டிரஸ்டி திருக்குமரன், விருதுநகர் எஸ்.டி.ஆர். டிராவல்ஸ் சேர்மன் குருமூர்த்தி, திருப்பூர் தொழிலதிபர் சண்முகம், மதுரை நூல் வியாபாரி, தேனி எல்.ஐ.சி. அதிகாரி சுகந்தா, சிந்தலைக்கரை எஸ். ஆர்.எம். எஸ். மெட்ரிக்குலேசன் பள்ளி தாளாளர் பவானி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாணவ மாணவியருக்கு புதிய உடைகள், சுவீட், காரம் ஆகியவைகள் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை விடுதி வார்டன் மற்றும் நிர்வாகி முருகேசன் ஆகியோர் செய்திருந்தனர்.



# சளி, காய்ச்சலை விரட்டும் உணவுகள்

மழைக்காலம் தொடங்கிவிட்ட சூழலில், சளிஇருமல் தொல்லையும், காய்ச்சல் நோய் பாதிப்புகளும் வேகமாக பரவத் தொடங்கிவிட்டன. தொண்டையில் உண்டாகும் மாற்றத்தை கண்டு சளி பிடிப்பதை உணர்ந்துகொள்ள முடியும். அடிக்கடி மருந்து மாத்திரைகள் என்று பயன்படுத்துவதை விட காய்ச்சலின் ஆரம்பத்திலேயே, சில உணவு பழக்க வழக்கங்களை மாற்றுவதனால், சளி காய்ச்சல் தொல்லையின் வீரியத்தை குறைத்துவிடலாம். இதற்கென பிரத்தியேகமான தயாரிப்புகள் எதுவும் தேவையில்லை. அதிக மெனக்கெடலும் தேவையில்லை. உணவு வழியாகவே பெருமளவு தொற்றை தடுத்துவிட முடியும். சாதாரண காய்ச்சல், சளி, தலைவலியாக இருந்தால் இந்த உணவு வகைகளை பின்பற்றினால் நிச்சயம் பலன் கிடைக்கும்.வெந்நீரில் இருந்து உங்கள் நாளை தொடங்குங்கள்.

தண்ணீரை கொதிக்க வைத்து இளஞ் சூடாக இருக்கும் போது சிட்டிகை சீரகத்தூள் சேர்த்து குடிக்க வேண்டும். அல்லது சீரகம் போட்ட நீரை கொதிக்க வைத்து குடிக்கவும். இதனால் தொண்டைக்கு இதமாக இருக்கும்.நாள் முழுக்க அரை மணி நேர இடைவெளியில் ஒரு டம்ளர் நீரை குடிப்பதன் மூலம் உடலில் நச்சு சிறுநீர் வழியாக வெளியேறிவிடும். அதோடு காய்ச்சலின் போது உடலில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்து கொள்ள வேண்டும். இல்லையெனில் வைரஸ், பாக்டீரியா கிருமித்தொற்று வேகமாக பரவக்கூடும். காலை உணவுகாய்ச்சல் காலங்களில் பிரட் உணவை நிச்சயம் தவிர்க்க வேண்டும்.



அதற்கு மாற்றாக ஆவியில் வேக வைத்த இட்லி அல்லது இடியாப்பம் சேர்க்கலாம். தொட்டுக்கொள்ள சட்னி, சாம்பார் தவிர்க்க வேண்டும். அதற்கு மாற்றாக புதினா, கறிவேப்பிலை, கொத்தமல்லி, இஞ்சி சேர்த்த துவையல், தாளிப்பு தேவையெனில் நல்லெண்ணெய்யில் தாளித்து தொட்டு கொள்ளலாம். இதனால் வாய் கசப்பு நீங்கும். காரத்துக்கேற்ப புளி, வரமிளகாய் சேர்க்க வேண்டும்.வயிறார சாப்பிடக்கூடாது. வயதுக்கேற்ப இரண்டு முதல் நான்கு இட்லிகள் வரை சாப்பிட வேண்டும். அரை வயிறாக சாப்பிட வேண்டும். அப்போதுதான் வாந்தி, குமட்டல் இருக்காது. அதேபோன்று இளஞ்சூட்டில் சாப்பிட வேண்டும். சாப்பிட்டு முடித்ததும் பத்து நிமிடங்கள் கழித்து மீண்டும் இளஞ்சூட்டில் நீர் குடிக்க வேண்டும்.மதிய உணவுபுழுங்கலரிசியை வெறும் வாணலியில் வறுத்து மிக்சியில் ரவை போன்று பொடியாக மாற்றவும். இரண்டு டம்ளர் நீருக்கு கால் டம்ளர் அரிசி ரவை சேர்த்து வேகவிடவும். நன்றாக வெந்ததும் அதில் சீரகப்பொடி, பெருங்காயம் சிட்டிகை, உப்பு சேர்த்து குடிக்கவேண்டும். தேவையெனில் தொட்டுகொள்ள புதினா சட்னி எடுத்துகொள்ளலாம். பிறகு ஒரு டம்ளர் வெதுவெதுப்பான சீரக நீரை குடிக்க வேண்டும். பூண்டு சேர்த்த மிளகு ரசத்தையும் இளஞ்சூட்டில் அருந்தலாம். அரிசி சாதத்துடன் கூடிய மிளகு ரசம் என்பது நிச்சயம் நன்மையே என்றாலும் சளி, இருமல், காய்ச்சல் நேரத்தில் முதல் இரண்டு நாட்கள் இதை தவிர்க்க வேண்டும்.

மாலை நேரத்தில்அரை வயிறு உணவு என்பதால் வயிற்றில் பசி உணர்வு அதிகமாகவே இருக்கும். மாலையில் இஞ்சி கஷாயம், சுக்கு கஷாயம் குடிக்கலாம். இஞ்சியை தோல் நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி அதில் 5 உலர் திராட்சை, 2 ஏலக்காய், 3 மிளகு சேர்த்து மிக்சியில் அரைக்கவும். பாத்திரத்தில் ஒரு தேக்கரண்டி வெல்லம் சேர்த்து சிறிது தண்ணீர் ஊற்றி வைக்கவும். பாகுக்கு முந்தைய பதம் வரும் போது அதில் அரைத்த விழுதை சேர்த்து கொதிக்க விடவும். பிறகு அதை இறக்கி வடிகட்டி குடிக்க வேண்டும். குழந்தைகளுக்கு கொடுக்கும் போது தேன் சேர்த்து கொடுக்க வேண்டும்.இரவு உணவுஆவியில் வேகவைத்த உணவு அல்லது கஞ்சி போதுமானது. அதிக காய்ச்சல் இல்லையெனில் எண்ணெய் அதிகம் சேர்க்காத சப்பாத்தி சாப்பிடலாம். இரவு நேரத்தில் துவையல் சேர்க்க வேண்டாம். பால், காபி, தேநீர் போன்றவைகளையும் தவிர்க்க வேண்டும். மென்மையான எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவை எடுத்துகொள்ள வேண்டும்.அதிகப்படியான சளி, காய்ச்சல் பிரச்சினை இருக்கும் போது நாள் முழுக்க இதை கடைப்பிடித்தால் அடுத்த நாள் தூங்கி எழும்போது உடல் சோர்வு நீங்கியிருப்பதை உணர்வீர்கள். ஏனெனில் இவை எல்லாமே உடலுக்கு எதிர்ப்பு சக்தி கொடுக்கக் கூடியவை.

S.Dhanalaxmi, yoga Terapist & Naturopathy, Yoga Teacher.

# யார் கடவுள்?
# – கவியரசர் கண்ணதாசன் தரும் விளக்கம்!

கடவுள் எப்படிப்பட்டவன்?

கவியரசன் கண்ணதாசன் சொன்னது.

ஆகாயத்தின் மேலிருந்து ஆளே தெரியாமல் ஆட்டியும் வைப்பான்.

மனிதன் ஆட்டம் கொஞ்சம் அதிகமானால் அடக்கியும் வைப்பான்.

அவன் தான் கடவுள்

பூலோகத்தில் வாழும் போது புகழையும் கொடுப்பான்.

பின்னர் புகழுக்காக வாழும் போது புரட்டியும் எடுப்பான்.

அவன் தான் கடவுள்

பூவிலே கொஞ்சம் தேனையும் வைப்பான்.

அங்கே தேனை வைத்ததை தேனீக்கும் சொல்வான்.

பின்னர் அந்தத் தேனடை இருப்பதை மனிதனுக்கும் சொல்வான்.

அவன் தான் கடவுள்

கேட்கும் திறனை கூர்மையாக எலிக்கும் வைப்பான்.

அந்த எலியே கேட்க முடியாமல் நடக்கும் பாதங்களை பூனைக்கும் வைப்பான்.

அவன் தான் கடவுள்

ஓடும் திறனை கூட்டுகின்ற கால்களை (மானுக்குக்) கொடுப்பான்.

பின்னர் அந்த மானை பிடிக்கின்ற சக்தியை புலிக்கும் கொடுப்பான்.

அவன்தான் கடவுள்

அற்புதமாய் சிந்திக்கின்ற ஆறறிவையும் கொடுப்பான்.

அதை முழுவதும் பயன் படுத்தாத மனிதர்களையும் படைப்பான்.

அவன் தான் கடவுள்

தவம் பல செய்தால் (மனிதன்) கேட்பதைக் கொடுப்பான்.

அவனே தறிகெட்டு நடந்தால் கொடுத்ததைப் பறிப்பான்.

அவன்தான் கடவுள்

நாட்டை ஆள விட்டு அழகும் பார்ப்பான்.



அவனே கொள்ளையடித்தால் கொடுத்தவனே பிடுங்கவும் செய்வான்.

அவன் தான் கடவுள்

புரியாதவனுக்கு புதிராய் இருப்பான்.

தன்னைப் புரிந்தவனுக்கு அறிவாய் இருப்பான்.

அவன் தான் கடவுள்

கடல் முழுதும் தண்ணீரை வைப்பான்.

தாகம் எடுத்தால் தவிக்கவும் வைப்பான்.

அவன் தான் கடவுள்

மாளிகையில் வாழ்பவன் ஆயுள் அற்பமாய் முடியும்.

சாலையோரம் வாழ்பவன் நூறாண்டு வாழ்வான்.

பின்னிருந்து இயக்குவான்.

அவன் தான் கடவுள்

தன்னை வெளியே தேடினால் விளையாட்டுக் காட்டுவான்.

(உள்ளத்தின்) உள்ளே தேடினால் ஓடி வந்து நிற்பான்.

அவன் தான் கடவுள்!

# உன் ஆளுமையை நீ உணர வேண்டும்!



வாழ்க்கையின் முற்பகுதியில் வெற்றி பெற சுறுசுறுப்பும் ஊக்கமும் தேவை. இறுதியில் வெற்றி பெற பொறுமையும் தன்னடக்கமும் தேவை.

வாழ்க்கை வாழ்வதற்கே தவிர *இல்லாததை, கிடைக்காததை நினைத்து ஏங்கி வீணடிப்பதற்கு அல்ல.

சிலந்தி வலைகள் ஒன்று சேர்ந்தால் சிங்கத்தையே கட்டி போடும் என்ற பழமொழி உண்டு.

நேரம் கிடைக்கும் போது நிச்சயம் கவனித்துப் பார். சிறுசிறு மெல்லிய கம்பிகள் ஒன்றாக முடுக்கப்பட்டிருக்கும். தனித்தனியாக எடுத்தால் ஒவ்வொரு கம்பியும் ரொம்ப மெலிதாக வலிமையற்றதாக இருக்கும்.

ஆனால் ஒன்று சேர்ந்தாலோ அதன் மொத்த வலிமை மிக மிக அதிகமாகிவிடும். சுய கட்டுப்பாடும் ஒழுக்கமும் இதைப் போலத் தான்.

இரும்பை போன்ற மனோ பலம் பெற சிறு சிறு நல்லொழுக்கங்கள் செய்தல் அவசியம்.

திரும்பத் திரும்ப செய்தால் அந்த நற்குணங்கள் ஒன்று சேர்ந்து மிக அதிகமான மனவலிமை உருவாகும்.



அதுபோலதான் உன் மன வலிமையை கட்டவிழ்த்து விட்டால் நீதான் உன் உலகத்தின் தலைவன் ஆகிவிடுகிறாய்.சுய ஆளுமையை மீண்டும் மீண்டும் பயின்றால் எந்த ஒரு தடையும்உன்னைத் தடுக்காது.

எந்தச் சவாலும் பெரியதாக இருக்காது.

எந்த பிரச்சனையும் எளிதில் சரியாகிவிடும்.

வாழ்க்கை எதிர்பாராத பிரச்சனைகளை உருவாக்கும் போது அதை எதிர்கொள்ள வேண்டிய மனோ சக்தியை சுயகட்டுப்பாடு உனக்குத் தரும்.

மன வலிமை இல்லாமல் இருப்பது மனதில் இருக்கும் ஒரு பெரிய குறைபாடு.

உயரிய வாழ்க்கை வாழும் அனைவரிடமும் அதிக அளவில் சுய ஒழுக்கமும் மனவலிமையும் இருக்கும். சொன்னதை சொன்ன நேரத்தில் செய்து முடிக்க மன வலிமையும் சுய ஒழுக்கமும் உதவும்.

நமக்கு எதிராக யாராவது வேண்டாததைப் பேசினால் பதில் சொல்லாமல் விட்டுவிடவும் இந்த சுய கட்டுப்பாடுதான் உதவுகிறது. நமக்கு எதிராக தடைகள் இருப்பதாகநீ நினைத்தாலும் முன்னேறிச் செல்ல இந்த மனோபலம்தான் உதவுகிறது.

மற்றவர்களுக்கும் உனக்கும் நீ செய்த வாக்குறுதிகள் நிறைவேற்ற இந்த சுயஒழுக்கம் தான் உதவுகிறது.

ஒரு பொய்யைமுத்தமிடுவதை விட, உண்மையிடம் அறை வாங்கிக் கொள்ளலாம்..

# இருக்கும் வரை அன்பு செலுத்துவோம்

நாம் வலிமை அடைகிறோம். நம்பிக்கையில் கிடைக்கும் மன நிறைவு வேறெதிலும் கிடைப்பதில்லை..

மனசாட்சிக்கு கட்டுப்பட்டு வாழ்பவன் நிச்சயம்வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவான்.காலம்போனால்திரும்புவதில்லை. காசுகள் உயிர்களைக் காப்பதுமில்லை. நான் எனும் அகங்காரத்தை விட்டொழியுங்கள்.

எமனுக்குப் பணம் கொடுத்து உயிரைக் காத்துக் கொள்ளும் அளவுக்கு, உலகத்தில் பணக்காரர் எவருமில்லை. ஆடுகிற ஆட்டமும், ஓடுகிற ஓட்டமும் ஒரு நாள் ஓயும் போது, கூடுகிற கூட்டம் தான் சொல்லும் நீங்கள் யாரென்பதை.

என்றும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது இந்த பூமியே வாடகை வீடுதான். எல்லோரும் ஒரு நாள்

வீட்டைக் காலி செய்து தான் ஆக வேண்டும். எனவே இருக்கும் வரை உயிர்களிடத்தில் அன்பு செலுத்துங்கள்.

பிறர் அழுது வருந்தும்படி ஒருவன் சேர்த்த பொருள், அவனும் அவ்வாறே அழுது வருந்தும்படி நீங்கிவிடும்.





நல்வழியில் வந்த பொருளைமுதலில் இழந்தாலும், அது பின்வந்து பயன் கொடுக்கும். கண்ணியமின்றி வந்த காசு, புண்ணியமின்றி போய்விடும்.அளவுக்கு மீறிய எது ஒன்றும் அவர்களையே வாழ விடாது.

விரும்புவதற்கும் நேசிப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. ஒரு செடியில் உள்ள மலரை விரும்பினால் பறித்துக் கொள்கிறோம். அதே மலரை நேசித்தால் அச்செடிக்கு தண்ணீர் ஊற்றுகிறோம். மற்றவர்களை கீழே தள்ளிவிடுவதால் நாம் வலிமை அடைவதில்லை. அவர்களை தூக்கி விடும் பொழுது தான் நாம் வலிமை அடைகிறோம். கொடுக்கும் பொருளை விட கொடுப்பவர் அன்பே பெரிது. பொருளாதாரத்திற்கும் ஆனந்தத்திற்கும் ஒரு துளி கூட சம்பந்தம் இல்லை.

# உழைக்காமல் முன்னேற்றம் இல்லை

உழைப்பில் தான் சுகம் உள்ளது. சூழ்நிலை உங்களை பதற்றப் பட வைக்கிறதா, அல்லது சூழ்நிலையை பதற்றப் படாமல் கையாளுகின்றீர்களா என்பதைப் பொறுத்தே உங்கள் மகிழ்ச்சி இருக்கும். நெல்லுக்கு உமியாகிய குற்றம் உண்டு.

நீருக்கு நுரையாகிய குற்றம் உண்டு. மணம் வாய்ந்த மலருக்கும் சிறப்பில்லாத புற இதழ்கள் ஆகிய குற்றம் உண்டு.

எனவே உங்களால் நல்லவர் என்று மிகவும் விரும்பி, நண்பராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர், காலப் போக்கில் அவரைக் கெட்டவர் என்று நாம் தெரிந்து கொள்ள நேரிட்டால், அதை மற்றவர்களுக்குத் தெரிவிக்காமல் உங்கள் மனத்திற்குள்ளேயே அடக்கிக் கொள்ள வேண்டும்.

அதை வெளிப்படுத்தும்போது, பண்பாட்டு நிலையிலிருந்து பிறழ்வதைப் போன்றதாகும். நாலடியார் கூறும் மிகச் சிறந்த பண்பாடு இது தான்.

*நல்லார் எனத்தான் நனிவிரும்பிக் கொண்டாரை*

*அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்*

*நெல்லுக்கு உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு*

*புல்லிதழ் பூவிற்கும் உண்டு.*

- நாலடியார் (221)


எஸ்.சூர்யா

ஒருவர் நட்பில் பிழையைப் பொறுத்துக் கொண்டால், இருவர் நட்பு தொடர்ந்து நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

பல முறை நம்மால் ஆராயப்பட்டு, அதன் பின் தேர்வு செய்யப்பட்டு ஏற்றுக் கொண்ட நண்பர், என்றேனும் ஒருநாள் நமக்குக் கெடுதல் செய்யும் எண்ணமுடையவராக மாறும்போது, அவர் நமக்குச் செய்த கெடுதலைப் பொறுத்துக் கொள்வது சிறந்த பண்பாடுடைச் செயலாகும்.

அதுமட்டுமன்றி அவரும் மனம் திருந்திப் பண்பாடுடையோராகலாம். எனவே, நண்பர் நாண நன்னயம் செய்து விடல் நற்பண்பினை உயர்த்தும் உன்னதமான செயலாகும்.


நட்பில் "பிழை பொறுத்தல்", மிகச் சிறந்த பண்பாடு. உழைப்பில் தான் சுகம் உள்ளது.

உழைப்பில்லாமல் முன்னேற முடியாது. வேலை செய்யாமல் ஒருவரிடம் பணம் பெறுவது பிச்சைக்குச் சமம்.

வேலையின்றி எவன் தூங்குகிறானோ அவனைக் காண்பது கெடுதல். எவன் ஒருவன் உடம்பை உழைப்பினாலும், மனதை உற்சாகத்துடன் வைத்துள்ளானோ அவனே சாதனையாளனாக மாறுவான்.

நம்முடைய இஷ்டப்படி உலகம் நடக்கவில்லை, கடவுளின் இஷ்டப்படித்தான் உலகம் நடக்கிறது. புத்திசாலித் தனமான மனிதர்கள் நல்லவர்களே.

ஆனால் சிறந்தவர்கள் அல்ல. சட்டத்தைக் கண்டு* பயப்பட்டால் அவன் ஏழை. சட்டமே பயப்பட்டால் அவன் பணக்காரன். சேரும் இடத்தைப் பொருத்ததே, நீர் ஆறாவதும், சேறாவதும். இருப்பது போதுமென்று நீங்கள் நினைத்தால், உங்களுக்கு நிம்மதி உறுதியாக இருக்கும்.



# நமக்கு என்னவோ அதையே ஏற்போம்!

நாம் அன்றாடம் தொடங்கும் காரியங்களில் வெற்றியை விட 99 சதவீதம் தோல்விகளே ஏற்படுகின்றன. இத்தகைய மனநிலையில் நாம் மிகவும் மனம் துவண்டு போகிறோம்; வாழ்க்கை மீது ஒரு பிடிப்பு இல்லாமல் போய்விடுகிறது. நாம் வாழும் வாழ்க்கை நமக்கு சலிப்பை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?

துறவி ஒருவர் ஒரு பெரிய மர நிழலில் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். அவர் தியானத்தின் போது வெயில் அவரை தாக்காதவாறு அந்த மரமானது குடை போன்று தன்னுடைய கிளைகளை பரப்பி அவரை காத்து வந்தது. நெடுங்காலங்கள் தவம் புரிந்த பின் தன்னுடைய தவத்தை முடித்துக் கொண்ட துறவி மரத்தை மிகவும் நன்றி உணர்ச்சியுடன் பார்த்தார். 'உன்னுடைய இந்த ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான நிழலும் தான் என்னுடைய தவத்தை சிறப்பாக முடிப்பதற்கு ஒரு காரணம்!' என்று மரத்திற்கு நன்றி கூறினார். அவ்வாறு நன்றி கூறிவிட்டு, 'உனக்கு ஏதாவது வேண்டுமானால் கேள்! நான் தருகிறேன்' என்றார்.

அதற்கு அந்த மரமோ, 'நான் நிறைய பூக்களை பூக்கிறேன். ஆனால் அவை அனைத்தும் காயாக மாறுவது இல்லை. அப்படி காயாக மாறினாலும் அவை யாவும் கனியாக மாறுவதில்லை. இது எனக்கு மிகவும் மனக்குறையாக உள்ளது. எனவே உங்களுடைய தவ வலிமையால் என்னுடைய பூக்கள் அனைத்தையும் காய்களாக மாற்றிவிடும் வல்லமையை தாருங்கள்!' என்று கேட்டது.

உடனே அந்த துறவி சிரித்துக் கொண்டே மரம் கேட்ட வரத்தை கொடுத்தார். மரத்தில் இருந்த பூக்கள் அனைத்தும் சில நாட்களில் பிஞ்சுகளாக மாறத் துவங்கின. அந்த வழி போவோர் வருவோரெல்லாம் பூத்துக் குலுங்கும் மரத்தை பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டனர்.

சிறிது காலத்தில் பிஞ்சுகள் எல்லாம் காய்களாக மாறத் தொடங்கின. மரம் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தது. ஆனால் அந்த மரத்தினுடைய சந்தோஷம் வெகு நாட்கள் நீடிக்க வில்லை. காய்கள் பெரிதாக பெரிதாக அவற்றின் எடை கூடிக் கொண்டே இருந்தது. மரத்தால் அத்தனை காய்களின் எடையையும் தாங்கிப் பிடிக்க முடியவில்லை. கழுத்தே முறிந்து விடும் அளவுக்கு கடுமையான வலியை அந்த மரம் அனுபவித்து வந்தது. இத்தகைய வேளையில்




ஒரு நாள் திடீரென மழையும் வந்தது. மழை பெய்தவுடன் மரத்தின் இலைகளில் தங்கியுள்ள நீர்த்துளிகளால் அதன் எடை இன்னும் அதிகமானது. தன்னுடைய கிளை முழுக்க காய்களையும், மழைத்துளிகளையும் சுமந்து கொண்டிருந்த மரம் அதிகப்படியான எடையை தாங்க முடியாததால் திக்கி திணறியது.

அந்த நேரம் பார்த்து, அந்த வழியாக வந்த துறவி, மழைக்கு ஒதுங்குவதற்காக அந்த மரத்திற்கு அடியில் ஒதுங்கினார். மரத்தைப் பார்த்து, 'நன்றாக இருக்கிறாயா? இப்பொழுது உனக்கு சந்தோசம் தானே?' என்று கேட்டார்.

உடனே மரம் 'ஐயா, தெரியாமல் நான் உங்களிடம் வரத்தை கேட்டு விட்டேன்! இறைவனின் படைப்பில் எது எப்படி படைக்கப்பட்டதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் என்பதை நான் புரிந்து கொண்டேன். என்னிடம் பூத்த அத்தனை பூக்களும் காயாக மாறும்போது, அதன் எடையை தாங்கும் சக்தி எனக்கு இல்லை! எனவே இறைவனின் படைப்பின் இயல்பு எதுவோ அதனையே நான் ஏற்றுக் கொள்கிறேன்! அதுவே எனக்கு மிக்க மகிழ்ச்சி. எனவே தயவு செய்து என்னை பழையமாதிரி மாற்றி விடுங்கள்!' என்று கூறியது.

மரத்தின் மனமாற்றத்தை அறிந்த துறவி அதனை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றினார்.

இந்த மரத்தை போல் தான் நாமும் நம்முடைய வாழ்க்கையில் தொடங்கும் ஒவ்வொரு செயலையும் வெற்றிகரமாக முடிய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் தொடங்குகிறோம். அது சூழலால் சில நேரம் வெற்றியடைந்தும் சில நேரம் வெற்றி அடையாமலும் முடிந்து விடுகிறது. எப்படி இருந்தாலும் நாம் தொடங்கிய ஒரு செயல் வெற்றியடையும் போது நமக்கு மகிழ்ச்சியையும் தோல்வியடையும் போது நமக்கு பயிற்சியையும் விட்டு செல்கிறது என நினைத்து மன திருப்தியுடன் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்! அப்பொழுதுதான் மீதமுள்ள நம்முடைய வாழ்நாளை நம்மால் மிகவும் சுவாரசியத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ முடியும்!



# படிப்படியாக முன்னேற புத்தகத்தைப் படி!

படி படி நூலைப்படி
முத்தமிழ் நூலைப்படி
முடங்காமாலிருக்கும் படி
நூலைப்படி
படி படி முத்தமிழ் நூலைப்படி

படி படி நூலைப் படி
ஆங்கில நூலைப்படி
அகிலத்தின் நுழைவாயிலில்
நுழையும்படி
நூலைப் படி
படி படி ஆங்கில நூலைப் படி..

படி படி நூலைப் படி
கணித நூலைப் படி
கண்ணும் கருத்துமாகும்படி
நூலைப்படி
படி படி கணித நூலைப்படி..

படி படி நூலைப் படி
அறிவியல் நூலைப் படி
அணுவுக்குள் அணுவை
அறியும் படி
நூலைப் படி
படி படி அறிவியல் நூலைப்படி ..

படி படி நூலைப்படி
சமூக நூலைப் படி
அகம் புரியும்படி
நூலைப் படி
படி படி சமூக நூலைப்படி..

மூவேளையும் படி
மூழ்கி மூழ்கி படி
மூவுலகமும் புரியும்படி
முப்பாலையும்
படி படி நூலைப்படி..

நால் மறை படி
நல்லதெல்லாம் நற்றுணையாகும்படி
நாளெல்லாம் நாவும் இனிக்கும் படி
படி படி நூலைப்படி...

கற்றவையெல்லாம்
கல்லாதவர்களும்
கற்கும் படி
நீ கற்பிக்கத்தான் வேண்டும்
அப்படி நூலைப்படி
கல்லும் கரைந்துப் போகும் படி
படி படி நூலைப்படி..

# பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் பருவநிலை மாற்றங்கள்!



**கா**ல நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நம்முடைய வாழ்வுகளை எப்படி மாற்றி இருக்கிறது என்பதை அறியும்போது எதிர்காலத்தைக் குறித்த பயம் ஏற்படுகிறது.

மழை பெய்ய வேண்டிய காலங்களில் செய்வதில்லை. அப்படியே பெய்தாலும் எப்போதும் இல்லாத அளவுக்கு பெய்து சேதத்தை உருவாக்குகிறது. எப்பொழுது மழை பெய்யும் என்பதை வானிலை மையம் அறிவித்தாலும் அது பொய்த்துப் போகிற சூழல் கூட சில நேரங்களில் உருவாகிறது.

WWF (World Wildlife Fund) 2024 லிவிங் பிளானட் அறிக்கை:

1970-2020 காலகட்டத்தில் உலகின் விலங்கினங்கள் சராசரியாக 73% குறைந்துள்ளன.

நன்னீர் உயிரினங்கள் 85%, நிலவாழ் உயிரினங்கள் 69%, கடல் வாழ் உயிரினங்கள் 56% வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

இது உலகின் ஒவ்வொரு மூலையையும் பாதிக்கும் ஒரு பெரிய பிரச்சனை.

பூமி ஆபத்தான நிலையை நெருங்குகிறது, இது மனிதகுலத்திற்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கும்.

இதற்கு மனித நடவடிக்கைகள், குறிப்பாக இயற்கை வாழ்விடங்களை அழித்தல், காலநிலை மாற்றம் போன்றவை முக்கிய காரணங்கள்.

பூமியில் உள்ள உயிரினங்களின் எண்ணிக்கை மற்றும் வகைகள் வேகமாக குறைந்து வருகின்றன.

உயிரினங்களின் இழப்பு சுற்றுச்சூழல் சமநிலையை கடுமையாக பாதித்து, மனிதர்களின் உணவு, மருத்துவம், நீர் போன்ற அடிப்படை தேவைகளையும் பாதிக்கும்.

உயிரினங்களின் இழப்பு காலநிலை மாற்றத்தை மேலும் தீவிரமாக்கும்.

என்ன செய்யலாம்? காடுகளை அழிப்பதை நிறுத்தி, புதிய காடுகளை உருவாக்க வேண்டும்.

புதைபடிவ எரிபொருட்களை குறைத்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை வாங்கி பயன்படுத்த வேண்டும்.

# பட்டா வாங்குவது எப்படி !




மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற அரசின் நடவடிக்கைகளும் பொதுமக்களுக்கு ஏற்றவாறு மாறி வருகிறது. முன்பெல்லாம் தன்னுடைய சொத்துக்கு பட்டா வாங்க வேண்டும் என்றால் கிராம நிர்வாக அதிகாரி முதல் தாசில்தார் வரை நடையாய் நடந்து பெறுவதில் சிக்கல் இருந்தது அது இப்போது நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ள சூழலில் பட்டா பெறுவதை குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்துவது அவசியம்.

நத்தம் புறம்போக்கு பட்டா வாங்குவது எப்படி? கிராம நத்தம் பட்டாக்கள் என்பவை யாவை? யார் வேண்டுமானாலும் புறம்போக்கு பட்டாவை பெற முடியுமா? அதற்குரிய விதிமுறைகள் என்னென்ன? இந்த நத்தம் பட்டாக்களை ஆன்லைனில் எப்படி டவுன்லோடு செய்வது?

நத்தம் என்றால் குடியிருப்பு பகுதி என்று அர்த்தம்.. கிராம நத்தம் என்றால், கிராமத்தில் இருக்கும் குடியிருப்பிற்கு என ஒதுக்கப்பட்ட நிலம் என்று பொருள்.. நத்தம் புறம்போக்கு நிலம் என்றால், நத்தம் குடியிருப்பு பகுதியில் இருக்கும் புறம்போக்கு நிலம் எனப்படும். கிராம நத்தம் நிலத்தை குடியிருப்புகளாக மட்டுமே பயன்படுத்த முடியுமே தவிர, வணிக நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாது.

நத்தம் நிலங்களுக்கு பட்டா வழங்கும் திட்டத்தை, அரசே நேரடியாக செயல்படுத்தி வருகிறது. அரசுக்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு பகுதிகளில் வசித்து வந்தால், அந்த இடத்திற்கும் தமிழக அரசு ஒவ்வொரு வருடமும் புதிதாக ஒரு அரசாணை பிறப்பித்து, அந்த அரசாணையின்படி கிராமங்களில் 3 சென்ட் அளவிற்கு நத்தம் இலவச வீட்டுமனை பட்டாவும், நகர்ப்புறங்களில் ஒரு சென்ட் அளவிற்கு நத்தம் இலவச பட்டாவும் வழங்கும்படியான அரசாணை பிறப்பித்து வருகிறது.

நத்தம் பட்டா: அதன்படி, கிராமங்களிலோ அல்லது புறநகர் பகுதிகளிலோ அல்லது நகரங்களிலோ நீண்ட காலமாக நத்தம் குடியிருப்பு பகுதிகளில் வசித்து வந்து, அந்த இடத்திற்கு பட்டா வாங்காமல் இருந்தால் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில், நத்தம் பட்டா வேண்டி தாராளமாக விண்ணப்பிக்க வேண்டும்.

நீங்கள் அரசுக்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு பகுதிகளில் குடியிருந்து, வீடுகட்டி உங்களுடைய அனுபவத்தில் வைத்திருந்தாலும், அந்த வீட்டிற்கான ரசீது, எத்தனை வருடம் அந்த வீட்டில் அல்லது அந்த இடத்தல் அனுபவம் செய்து வந்தீர்கள் மற்றும் அதற்கான மின் இணைப்பு மற்றும் இதர ஆவணங்களை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பித்து இலவச வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பிக்கலாம்.

ஆட்பேசனை: ஆனால், இப்படி நீங்கள் நத்தம் அல்லது நத்தம் புறம்போக்கு இடத்திற்கு வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பிக்கும்போது, அந்த இடமானது ஆட்சேபனையற்ற நிலமாக இருக்க வேண்டும்.

காரணம், அந்த இடத்தை வருவாய் ஆய்வாளர், விஏஓ ஆய்வுசெய்வார்கள்.. அப்போது, சம்பந்தப்பட்ட அந்த இடம், பொது இடம் கிடையாது, நீர்நிலைக்கு அருகில் இல்லை, ஆட்சேபனையற்ற இடம், மேச்சல் புறம்போக்கு கிடையாது என அனைத்தையும் ஆய்வு செய்து, இறுதியாக ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அந்த அறிக்கையின்படியே, வட்டாட்சியர் நத்தம் வீட்டுமனை பட்டா வழங்குவார்கள்.

வாரிசு சான்றிதழ்: அப்படி விண்ணப்பிக்கும்போது, உங்களுடைய முன்னோர்கள் பெயர் அந்த சம்பந்தப்பட்ட புல எண்ணில் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், உங்களுடைய வாரிசு சான்றிதழ், மற்ற ஆவணங்களை சமர்ப்பித்து, உங்கள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் பெறமுடியும்.

ஒருவேளை உங்களுக்கு அந்த இடத்திற்கான புல எண்கள் தெரியாவிட்டால், சம்பந்தப்பட்ட விஏஓ அலுவலகத்திற்கு சென்று, உங்கள் இடத்திற்கான புல எண்ணை தெரிந்து கொள்ள வேண்டும்.

யார் பெயரில் உள்ளது: அதாவது, அந்த புல எண் யாருடைய பெயரில் உள்ளது? உங்கள் முன்னோர்கள் பெயரில் உள்ளதா? அரசுக்கு சொந்தமான நத்தம்




புறம்போக்கு பகுதியாக உள்ளதா? பொதுமக்கள் பயன்படுத்தப்படும் ஆட்சேபனைக்குரிய இடத்தில் உள்ளதா? வேறொரு தனிநபர் பெயரில் உள்ளதா? போன்றவற்றை தெரிந்து கொண்டு, நத்தம் வீட்டுமனை வேண்டி விண்ணப்பிக்கலாம்.

ஒருவேளை நீங்கள் குடியிருக்கும் பகுதி, ஆட்சேபனைக்குரிய பகுதியாக ஏரி, குளம் போன்றவற்றிக்கு அருகிலோ அல்லது மக்கள் பயன்பாட்டிற்குரிய நிலத்தில் ஆக்கிரமித்து வசித்து வந்தாலோ, அந்த இடத்திற்கு நத்தம் வீட்டுமனை பட்டா வழங்கப்பட மாட்டாது. அதேபோல, அந்த நத்தம் இடமானது வேறொரு தனிநபர் பெயரில் இருந்தாலோ அல்லது அந்த இடத்திற்கு 2 நபர்கள் நத்தம் இலவச வீட்டுமனை வேண்டி விண்ணப்பம் செய்திருந்தாலோ, அந்த இடத்திற்கு நத்தம் வீட்டுமனை பட்டா வழங்கப்படாது..

நத்தம் பட்டா: ஒரே புல எண்ணிற்கு அல்லது சொத்திற்கு 2 பேருமோ நத்தம் வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பிக்க நேர்ந்தால், அதை நீதிமன்றம் மூலமாக மட்டுமே முடிவு செய்து அந்த இடம் யாருடைய பெயரில் அனுபவத்தில் இருக்கிறது? யாருக்கு எந்த இடம் சொந்தமானது? என்பதை உறுதி செய்து அன்பிறகே நத்தம் வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.

அதேபோல ஆன்லைனிலும் eservices.tn.gov.in என்ற அதிகாரபூர்வ இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். அடையாளச் சான்று உள்ளிட்ட தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். கிராம நத்தம் நிலத்தை குடியிருப்புகளாக மட்டுமே பயன்படுத்த முடியும். வணிக நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

நத்தம் பட்டாவை எப்படி டவுன்லோடு செய்து கொள்வது தெரியுமா?

https://eservices.tn.gov.in/ என்ற அதிகார என்ற அதிகாரப்பூர்வ வெப்சைட்டிற்கு சென்று பட்டா / சிட்டா உள்ளிட்ட விவரங்களை பார்வையிட்டு, தேர்வு செய்ய வேண்டும்.

இப்போது உங்களுடைய மாவட்டத்தின் பெயர், நீங்கள் இருக்கும் வட்டத்தின் பெயர், கிராமத்தின் பெயர், பட்டா எண் அல்லது புல எண் அல்லது நிலத்தின் பெயர், நிலத்தின் வகை, நிலத்தின் புல எண், உட்பிரிவு எண் போன்றவற்றை சரியாக பதிவிட வேண்டும்.


அதேபோல, ஊரகமா? நத்தமா? என்ற ஆப்ஷன்களையும் நிரப்ப வேண்டும். அதாவது ஊரகம் என்றால் உங்களுடைய வயல் சார்ந்த இடங்களாகும். நத்தம் என்றால் உங்கள் வீடு சார்ந்த நிலங்களை குறிப்பதாகும்.

இறுதியில், கேப்சா எண்ணை பதிவிட்டு, "சமர்ப்பி" என்பதை கிளிக் செய்தால், உங்களது நத்தம் நிலத்தின் பட்டாவை நீங்கள் ஆன்லைன் மூலமாகவே காணலாம், இதனை டவுன்லோடும் செய்து கொள்ளலாம்.

அதுமட்டுமல்ல, https://eservices.tn.gov. in/ என்ற இணையதளத்தின் மூலம், பட்டா மாறுதல், பட்டாசிட்டா விவரங்கள், அ பதிவேடு விவரங்கள், அரசு புறம்போக்கு நிலம், புலப்பட விவரங்கள், நகர நில அளவை வரைபடம் ஆகியவற்றை எளிதாக தெரிந்து கொள்ளலாம். இதன்மூலம் நிலத்தின் உரிமையாளர் யார்? நிலத்தின் அளவு எவ்வளவு என்பது பொதுமக்களுக்கு துல்லியமாக தெரியும். அதன் மூலம் நில மோசடிகளில் சிக்கிவிடாமலும் தப்பித்து கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# 52 கோடிக்கு ஏலம் போன ஒரு வாழைப்பழம்!



சுவரில் டேப் போட்டு ஒட்டிய ஒற்றை 'வாழைப்பழம்' ஏலத்தில் ரூ.52 கோடிக்கு விற்பனை.. சுவாரஸ்ய பின்னணி. எல்லாவற்றையும் கலைநயத்தோடு பார்க்க வேண்டும் என்று பலர் கூறுவதுண்டு. ஆனால் தற்போது நடந்துள்ள இந்த சமபவம் இதெல்லாம் ரொம்ப ஓவர் என்று சொல்லும் அளவுக்கு உள்ளது. அதாவது, சுவரில் டக்ட் டேப் போட்டு ஒட்டப்பட்ட ஒரு வாழைப்பழம் சுமார் 6.2 மில்லியன் டாலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த பிரபல கைவினைக் கலைஞரான மொரிசியோ கட்டெலன் என்பவரது கலைப்படைப்படைப்புதான் இது. அமெரிக்காவின் நியூயார்க் ஏல மையத்தில் சுவற்றில் டக்ட் டேப் போட்டு ஒட்டப்பட்ட இந்த வாழைப்பழம் கடந்த புதன்கிழமை ஏலத்திற்கு வந்துள்ளது.

இதன் ஆரம்ப விலையாக 8,00,000 டாலரில் ஏலம் தொடங்கிய நிலையில் சீனாவை சேர்ந்த கிரிப்டோ கரன்சி தொழிலதிபரான ஜஸ்டின் சன், 6.2 மில்லியன் அமெரிக்க டாலர் கொடுத்து, அந்த வாழைப்பழத்தை வாங்கியுள்ளார். இது இந்திய மதிப்பில் ரூ.52.35 கோடி ஆகும். இந்த ஏல விவகாரம் சமூக வலைத்தளங்களில் தீயாக பரவி பேசுபொருளாகியுள்ளது

இந்த படைப்பை உருவாக்கிய கைவினைக் கலைஞர் மொரிசியோ கட்டெலன் வித்தியாசமான படைப்புக்களை உருவாக்குபவர். கடந்த 2016ம் ஆண்டு தங்க கழிப்பறை கோப்பையை உருவாக்கி உலகம் முழுவதும் பிரபலமானார்.



அதன்பின் கடந்த 2019ம் ஆண்டு மியாமி நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் வாழைப்பழத்தை சுவற்றில் ஒட்டி அதை பார்வைக்கு வைத்தார். தன்னுடைய இந்த படைப்புக்கு 'காமெடியன்' என அவர் பெயர் சூட்டினார். அவரது இந்த படைப்பு ரூ.85 லட்சத்து 38 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

ஏலத்தில் எடுக்கப்பட்ட வாழைப்பழம் மக்களின் பார்வைக்காகத் தொடர்ந்து அதே கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியைப் பார்வையிட வந்தவர்கள், அனைவரும் அந்த வாழைப்பழத்துடன் செல்பி எடுத்துக்கொண்டனர்.

ஆனால் ஒருநாள் அந்தக் கண்காட்சிக்கு வந்த பிரபல கலைஞர் டேவிட் டதுனா, வாழைப்பழத்தை எடுத்து சாப்பிட்டு விட்டார். ஆனால் இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மீண்டும் அதே இடத்தில் வேறொரு வாழைப்பழம் ஒட்டிவைக்கப்பட்டு, அதற்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. கண்காட்சி முடிந்ததும் அந்த வாழைப்பழம் ஏலம் எடுக்கப்பட்டவரிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது.

இதற்கிடையே சுவற்றில் வாழைப்பழத்தை டக்ட் டேப் போட்டு ஒட்டுவது [ காமெடியன்] தனது அறிவுசார் உடைமை என்ற உரிமத்தை கட்டெலன் வாங்கி வைத்தார். இதனால் தற்போது அதேபோன்று சுவற்றில் டக்ட் டேப் போட்டு அவர் ஒட்டிய வாழைப்பழமே தற்போது நியூயார்க் ஏலத்தில் ரூ.52 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது.

இந்த படைப்பின் சாராம்சம் வாழைப்பழத்தில் இல்லை என்றும் அந்த ஐடியா தான் இதில் விஷயமே என்று கட்டெலன் கூறுகிறார். இது கலை, மீம்ஸ் மற்றும் கிரிப்டோ உலகங்களை இணைக்கும் படைப்பு என்று வாங்கியவர் தெரிவித்துள்ளார்.



இயக்குநர் நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடித்த 'மகாராஜா' திரைப்படம் ஜூன் மாதம் வெளியாகி ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.இத்திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி ரூ.100 கோடிக்கும் அதிகமாக வசூலித்து இந்தாண்டின் வெற்றிப்படமானது. ஓடிடி தளத்திலும் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இதனிடையே ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்ற 'மகாராஜா' திரைப்படத்தை இந்தியில் ரீமேக் செய்ய உள்ளதாகவும் கூறப்பட்டது. இதனிடையே 'மகாராஜா' திரைப்படத்தை சீன மொழியில் டப்பிங் செய்து அலிபாபா குழுமம் சீனாவில் வெளியிட்டது. மேலும் இப்படம் 40,000 திரைகளில் வெளியானது. இந்திய அளவில் ரசிகர்களை கவர்ந்த இந்த படம் தற்போது சீன ரசிகர்களின் வரவேற்பை பெற்று கொண்டாடப்பட்டு வருகிறது.



சித்தார்த் அதிதி ராவின் திருமணம் கடந்த செப்டம்பர் மாதம், தெலங்கானாவில் கண்கொள்ளாக் காட்சியாக நடந்து முடிந்தது. சமீபத்தில், ராஜஸ்தானில் இரண்டாவது முறையாகத் திருமணம் செய்து மாலையும் கழுத்துமாக சோஷியல் மீடியாவில் டிரெண்ட் ஆனார்கள். சித்தார்த்தின் 'மிஸ் யூ' திரைப்படம் வெளியிடத் தயாராக உள்ளது.



பாபு நடிப்பில் வெளியான குண்டூர் காரம் படத்தில் இடம்பெற்ற குர்ச்சி மடத்த பெட்டி பாடலின் மூலம் இந்திய அளவில் பிரபலமான ஸ்ரீலீலா, தற்போது சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் உருவாகியுள்ள புஷ்பா 2 படத்தில் சிறப்பு பாடலுக்கு நடனமாடியிருக்கிறார். கிஸ்ஸிக் என பெயரிடப்பட்டுள்ள இந்த பாடல் சமீபத்தில் வெளியாகி வைரலானது.






வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற எஸ்.ஜே சூர்யா பேசுகையில், " நான் பெரிய அறிவாளியா? முட்டாளா? பலசாலியா? என்று கேட்டால் அதெல்லாம் எனக்கு தெரியாது. ஆனால் என் உழைப்புக்கு உண்மையாக இருப்பேன்.

அது என்னிடம் உள்ள ஒரு நல்ல குணம். அதை நான் 100% பெருமிதமாக சொல்லிக் கொள்வேன். இந்த பட்டம் என்னுடைய உழைப்புக்கும், உண்மைக்கும் கிடைத்த பரிசு. இதை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றார்.

நடிகர் அஜித் குமார் இயக்குநர் மகிழ் திருமேனி கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் விடாமுயற்சி. அஜித் குமாருடன், ஆரவ், அர்ஜுன், திரிஷா, ரெஜினா கசான்ட்ரா, நிகில் நாயர் மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ள இப்படம் பொங்கலுக்கு வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல இயக்குனர் அட்லி இயக்கத்தில் கடந்த 2016ம் ஆண்டு விஜய் நடிப்பில் வெளியான திரைப்படம் 'தெறி'. இந்த படத்தில் விஜய்யுடன் சமந்தா, மொட்டை ராஜேந்திரன், ராதிகா உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். இந்த படத்தின் இந்தி ரீமேக்தான் 'பேபி ஜான்' என்பது குறிப்பிடத்தக்கது.



# சொர்க்க வாசல் – திரைவிமர்சனம்

ஆர்.ஜே.பாலாஜி கதாநாயகனாக நடித்த படம் சொர்க்கவாசல். செல்வராகவன், கருணாஸ், நட்டி நட்ராஜ், , சானியா ஐயப்பன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் இந்த படத்தை ஸ்வைப் ரைட் நிறுவனம் தயாரிக்க சித்தார்த் விஸ்வநாத் இயக்கியுள்ளார்.

சாலையோர உணவகம் நடத்தும் பார்த்திபன் (ஆர்ஜே பாலாஜி), செய்யாத குற்றத்துக்காக சிறைக்குச் செல்கிறார். அங்கு பிரபல ரவுடியான சிகாவுக்கு (செல்வராகவன்) தனி மரியாதை. திருந்தி வாழ ஆசைப்படும் அவருக்கும் புதிதாக வரும் சிறை கண்காணிப்பாளர் சுனில் குமாருக்கும் (ஷராஃபுதீன்) ஈகோ மோதல். சிகாவை அடக்க முயற்சிக்கிறார் அனில் குமார். அந்த மோதல் என்ன விளைவை ஏற்படுத்துகிறது? சிகாவுக்கு என்ன ஆகிறது? சிறைக்குள் சிக்கிய பார்த்திபனால் வெளியே வர முடிந்ததா? என்பதை தியேட்டரில் சென்று பாருங்கள்.

எல்.கே.ஜி. உள்ளிட்ட படங்களில் இதுவரை நகைச்சுவை நாயகனாக மட்டுமே பார்த்து வந்த ஆர்.ஜே. பாலாஜி, முதல் முறையாக தனது புதுவிதமான நடிப்பை இப்படத்தில் வெளிக்காட்டியுள்ளார். சிறையில் அவர் படும் கஷ்டங்கள், சொல்லமுடியாத துன்புறுத்தல்கள், பயம், கோபம் என அனைத்து இடங்களிலும் அவர் நடித்த விதம் அருமையாக இருந்தது.

மத்திய சிறைச்சாலையில் இருக்கும் ரவுடியான செல்வராகவன் தன்னுடைய சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். ஆர்.ஜே. பாலாஜியின் காதலியாக வந்த சானியா அய்யப்பன் தனது கதாபாத்திரத்திற்கு நியாயம் செய்துள்ளார். காவல் துறை அதிகாரியாக வரும் ஷெராபுதீன், இலங்கைத் தமிழர் கதாபாத்திரம் உள்ளிட்ட துணை கதாபாத்திரங்கள் அழுத்தமாக நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

அதே போல் இசை, பிஜிஎம், ஒளிப்பதிவு என அனைத்துமே ரசிகர்களை கவரும் விதத்தில் உள்ளன என்றே கூறலாம். முதல் பாதியை எமோஷனலாக எடுத்துள்ள இயக்குனர், இரண்டாம் பாதியில் சிறையில் நடக்கும் சில கொடூரங்களை காட்டியுள்ளார்.



# மழைக்காலங்களில் மின்சாதனங்கள் உபயோகத்தில் கவனம்!

செய்தித்தாள்களிலும் வலைதளங்களிலும் மின்சார சாதனங்கள் வெடிப்பதன் மூலம் ஏற்படும் விபத்துகளை படித்து வருகிறோம். அது குறித்த விழிப்புணர்வை நமக்குள் ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.

நீண்ட நாட்கள் உபயோகத்தில் உள்ள பழைய சுவிட்சுகளை அவசியம் மாற்றிவிட வேண்டும். தரமான சுவிட்ச்களை வாங்கிப் பொருத்த வேண்டும்.

வீதண்ணீர் ஏற்ற வைத்துள்ள மோட்டர் சுவிட்ச் போர்ட், வாஷிங் மிஷின், ஃபிரிட்ஜ் கீழே ரப்பர் மேட் போட்டுக் கொள்வது பாதுகாப்பானது. எந்த சுவிட்சை இயக்கும் போதும் இடது கையை பின்புறத்தில் கட்டிக் கொண்டு, வலது கை சுட்டு விரலால் மட்டுமே இயக்க வேண்டும்,

பாத்ரூம் சுவிட்ச் போர்டின் மேல் ஒரு பழைய டூத் பிரஷ் வைத்துக் கொண்டு, அதனால் சுவிட்சைப் போடுவதே பாதுகாப்பானது. மழைக் காலம் வாட்டர் ஹீட்டர் அடிக்கடி பயன்படுத்த வேண்டியிருப்பதால், அதன் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஹீட்டருக்கு கொடுக்க கூடிய இன்லெட், அவுட்லெட் ஏதும் மாறவே கூடாது. எதிலும் கண்ட்ரோல் வால்வ் வைத்துவிடக் கூடாது.அவுட்லெட், ஹாட் வாட்டர் டேப் வழியாக தண்ணீர் வருவதை உறுதி செய்து கொண்ட பின்னரே,ஹீட்டர் சுவிட்சை ஆன் பண்ண வேண்டும். ஹீட்டர் சுவிட்சை டவல்/துடைக்கும் துண்டை வைத்து ஆஃப் செய்தால் ஈரக்கையோடு சுவிட்சை தொடுவதிலிருந்து தப்பித்து விடலாம். ஈர மின் சாதனங்களான வாஷிங் மெஷின், கிரைண்டர் போன்றவற்றைக் கையாளும் போது, சுவிட்ச்சை ஆஃப் பண்ணாமல் ஈரத் துணிகளை எடுப்பதோ, மாவை அள்ளுவதோ கூடவே கூடாது.

இவ்வளவு கவனமாக இருந்தும், ஆக்சிடெண்டலாக ஷாக் அடிக்க நேர்ந்தால், நேர்ந்து விட்டால், அருகிலுள்ளவர் ஒரு கம்பால் அல்லது துடைப்பக் கட்டையால் பாதிக்கப் பட்டவரின் கையை அடிக்க வேண்டுமே அன்றி, பாதிக்கப்பட்டவரை நேரடியாக தொடவே கூடாது.கைக் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு மின்சாதனங்களைத் தொடவே கூடாது. குழந்தைகளுக்கு எட்டும்படியாக சுவிட்ச் பாக்ஸ் வைக்கக் கூடாது.சிங்கிள் பேஸ் சப்ளை வைத்திருப்போர், இரு முனை அயன்கிளாட் சுவிச்சும், 3 பேஸ் சப்ளை வைத்திருப்பவர்கள் 4 முனை சுவிட்ச்சும் வைத்திருக்க வேண்டும். நியூட்ரலில் லின்க் போட்டிருக்க வேண்டும்; ஃப்யூஸ் போடக் கூடாது.

நியூட்ரல் கிரவுண்டிங்கை சரியாகப் பராமரிக்க வேண்டும்.

# செரிமான சிக்கலை சரி செய்வது எப்படி?

உணவு செரிமானம் ஆகாத நேரத்தில் மலச்சிக்கல் ஏற்பட்டவுடன், உடனடியாக மலமிளக்கி மருந்துகளின் ஆதரவைத் தேடக் கூடாது. தொடர்ந்து மலச்சிக்கல் ஏற்படுவதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து, உணவு மற்றும் வாழ்வியல் முறை மாற்றங்களின் மூலமே சரிசெய்ய முயற்சிக்க வேண்டும்.

இள வெந்நீர் குடலின் அசைவுகளை அதிகரிக்க (Increases peristalsis) உதவும். நிறைய தண்ணீர் குடிப்பது மலச்சிக்கலுக்கான முதல் மருந்து. பன்னாட்டு குளிர்பானங்களை எப்போதும் அருந்தக் கூடாது.

விளக்கெண்ணெய் அமைதியான மலமிளக்கி. விளக்கெண்ணெயை மலமிளக்கியாக குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை உபயோகிக்கலாம். முன்பெல்லாம் விளக்கெண்ணெயை அவ்வப்போது சிறிதளவு குடிக்கும் வழக்கம் நம்மிடையே இருந்தது. இப்போது முற்றிலும் மறைந்துவிட்டது. செரிமானத்தை சிறப்பாக்கக்கூடிய சீரகம், சுக்கு, மிளகு, ஏலம் போன்றவற்றை உணவு வகைகளில் அதிகமாக சேர்த்துக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட கால இடைவெளியில், மருத்துவரின் ஆலோசனைப்படி பேதி மருந்துகளை எடுத்துக்கொண்டு, செரிமானப் பகுதிகளை புத்துணர்வுடன் வைத்துக்கொள்வது அவசியம். பேதி மருந்துகள் மலச்சிக்கலை நீக்கும்; உடலில் தேங்கிய நச்சுப் பொருள்களை வெளியேற்றவும் உதவும். நீண்டகால மலக்கட்டினை சரிசெய்ய, 'பீச்சு' (Enema) எனப்படும் புற மருத்துவ முறையும் அற்புதமான பலனை அளிக்கக்கூடியது.

சித்த மருத்துவத்தில் உள்ள நிலவாகைச் சூரணம், சிறந்த மலமிளக்கி. அதிலுள்ள கிளைக்கோசைடுகள் (Glycosides), செரிமானப் பகுதியில் உள்ள நரம்புகளைத் தூண்டி, மலத்தை வெளியேற்றுவதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

திரிபலா சூரணம், பொன்னாவரை சூரணம், கடுக்காய் லேகியம், கடுக்காய் சூரணம், மூலக்குடோரி எண்ணெய் என உடல் அமைப்புக்குத் தகுந்த நிறைய சித்த மருந்துகள் இருக்கின்றன.

தொடர்ந்து மலச்சிக்கல் தொந்தரவு நீடித்தால்,



மருத்துவரின் ஆலோசனை நிச்சயம் தேவை. சில நோய் நிலைகளிலும் மலச்சிக்கல் பிரச்னை உண்டாகும் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும்.நாம் சாப்பிடும் உணவு வகைகளில் நார்ச்சத்து நிறைந்த கோதுமை, கேழ்வரகு. தினை, வரகு, கொள்ளு போன்ற முழுத் தானிய உணவு வகைகள் மலச்சிக்கலைத் தவிர்க்க உதவும் (தவிடு நீக்கப்பட்ட தானியங்களில் நார்ச்சத்து இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்). வாழைத்தண்டு, காரட், முள்ளங்கி, முட்டைக்கோஸ், பாகற்காய், புடலங்காய் சுரைக்காய் பூசணிக்காய், அவரைக்காய், கொத்தவரங்காய் போன்ற காய்கறிகள், பொட்டுக்கடலை, கொண்டைக்கடலை, மொச்சை போன்ற பருப்புகள், கீரைகள், ஆரஞ்சு, கொய்யா, மாதுளை, ஆப்பிள், அத்திப்பழம், பேரீச்சை, மாம்பழம் போன்ற பழங்களிகற்றாழை சிறிது கற்றாழையை நன்கு காய வைத்து, பொடி செய்து கொள்ளுங்கள். பின் ஒரு டம்ளர் நீரில் 1 சிட்டிகை கற்றாழை பொடி மற்றும் 1 சிட்டிகை மஞ்சள் தூள் கலந்து கொள்ளுங்கள். இப்படி ஒரு தொடர்ந்து மூன்று முதல் நான்கு நாட்கள் குடித்து வர, மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்*ல் நார்ச்சத்து அதிகம். இவற்றை தினசரி உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மிளகு, ஓமம், கொத்துமல்லி, மிளகாய் போன்றவற்றிலும் நார்ச்சத்து அதிகம். இவற்றில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை அதிகப்படுத்தவேண்டும். உதாரணம்: மிளகு ரசம், கொத்துமல்லிச் சட்னி.தினமும் 3 லிட்டருக்குக் குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும். காபி, தேநீர், மென்பானங்கள் குடிப்பதைக் குறைத்துக்கொண்டு, இளநீர், பழச்சாறுகள் குடிப்பதை அதிகப்படுத்த வேண்டும். இனிப்பு வகைகளையும் கொழுப்பு உணவுகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும். விரைவு உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். இரவில் இரண்டு பழங்களைச் சாப்பிட வேண்டும். வாழைப்பழம்தான் சாப்பிட வேண்டும் என்பதில்லை. பருவத்துக்குத் தகுந்த எந்தப் பழத்தையும் சாப்பிடலாம்.

– பெருசங்கர், பவானி

# கணவன், மனைவி உறவில் தொடர் மகிழ்ச்சி உருவாவது எப்படி?

கூட்டுக்குடும்பமாக இருந்த காலத்தில் தாய், தந்தை, அண்ணன் தம்பிகள் என்ற உறவுகள் சங்கிலியாக ஒன்றை ஒன்று பிணைந்து கொண்டு இருந்தன அதனால் கணவன் மனைவிக்கு இடையே அதிகம் சண்டை அந்த நாளில் வந்ததில்லை அப்படியே வந்தாலும் அதை பெற்றவர்கள், உறவினர்கள் இரண்டு பக்கமும் எடுத்துச் சொல்லி உறவுகளில் பிரிவுகள் இல்லாமல் தொடர செய்வதும் உண்டு.

ஆனால் எவ்வளவு வேகமாக காதலித்து திருமணம் செய்து கொள்கிறார்களோ அதே வேகத்தில் விவாகரத்தும் பெற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர்களிடமிருந்து தனியாக குடும்பத்தில் கணவன்_ மனைவியிடையே சிறு சிறு சண்டை வருவது சர்வ சாதாரணம். ஆனால் அது பாதிப்பு அடைவதற்கு காரணம் என்ன என்பதை அவர்கள் மாத்திரமே உணர்ந்து சரி செய்து கொள்ள வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் வேண்டிய, வேண்டாத உறவுகளால் கணவன் மனைவியின் சாதாரண கருத்து வேறுபாடு மிகைப்படுத்தப்பட்டு விவாகரத்து வரை கொண்டு செல்லப்படும். எனவே கணவனும் மனைவியும் தங்களுக்குள் பேசி தீர்த்துக் கொண்டால் பிரச்சனை தொடர வாய்ப்பில்லை மகிழ்ச்சி மட்டுமே வளரும்.

எண்ணங்கள் வெவ்வேறாக இருந்தாலும் , ஒருவர் எண்ணத்திற்கு ஒருவர் மதிப்பு தந்து சொல்வதை காதில் வாங்க வேண்டும்.



கணவன் மட்டுமே வேலைக்கு செல்லும் வீட்டில் ,தன்னால் தான் குடும்ப பொருளாதாரம் இயங்குகிறது என்பதை எப்போதும் கணவன் வார்த்தைகளில் வெளிப்படுத்தக் கூடாது. மனைவியும் வேலைக்கு செல்லும் வீட்டில், நானும் தான் வேலைக்கு போறேன் என்ற வார்த்தையை மனைவி அடிக்கடி சொல்லக் கூடாது.

இவரிடம்/இவளிடம் இதைச் சொன்னால் பெரிய பூகம்பமே வெடிக்குமோ என்ற பயத்தை ஒரு போதும் மனைவிக்கு கணவனும், கணவனுக்கு மனைவியும் தரக்கூடாது.பொய்யின் ஆரம்பமே பயம் தான்.

எவ்வளவு பெரிய சண்டை என்றாலும் உங்கள் இருவர் பற்றி மட்டும் தான் பேச வேண்டும்.கணவன் குடும்பத்தாரை பற்றி மனைவியும், மனைவியின் குடும்பத்தாரை பற்றி கணவனும் பேசவே கூடாது. தவறுகளில் மிகப்பெரிய தவறு இது.


மனைவியை தன்னில் ஒரு பாதியாக பார்க்காவிட்டாலும் வேலைக்காரியாய் பார்க்காமல் இருப்பது கணவனுக்கு அழகு.

மனைவியை ஏற்றது போல் அவள் குடும்பத்தையும் முழுமனதாய் கணவன் ஏற்க வேண்டும்.கணவனை ஏற்றது போல் அவன் குடும்பத்தையும் முழுமனதாய் மனைவி ஏற்க வேண்டும். கணவன் நண்பர்களுடன் ஊர் சுற்றி விட்டு நேரம் கழித்து வீடு வருவது. மனைவியை மட்டும் வீட்டுக்குள்ளே ஆயுள் கைதி ஆக்குவது, அவளை வெளியுலகம் அறியவிடாமல் செய்வது தவறு. படிப்பறிவில்லா பெண்களை சில ஆண்கள் இப்படித் தான் நடத்துகின்றனர். கணவனும் மனைவியும் தனித் தனியே வெளியில் சென்றால் நேரமாய் வீடு திரும்ப வேண்டும் .அப்படி நியாயமான காரணத்திற்காக தாமதம் ஏற்பட்டால் ஒருவர் சொல்லும் காரணத்தை ஒருவர் நம்பி ஏற்றுக் கொள்ளவேண்டும். அம்மாவின் சமையல் பக்குவத்தை எதிர்பார்த்து மனைவியின் சமையலைகுறை கூறி சர்ச்சை ஏற்படுத்தாதீர்கள்.

எனவை நரகமாய் இருக்கும் வீடு சொர்க்கம் ஆவதும், சொர்க்கமாய் இருந்த வீடு நரகம் ஆவதும் கணவன் மனைவி நடந்து கொள்ளும் விதத்தில் தான் இருக்கிறது.

– பொள்ளாச்சி முத்துராஜ்

கடுமையான மழை பெய்து வருவதால் கபாலி கான் வருவதற்கு சிரமம் தான் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது ரெயின் கோட் தொப்பி எல்லாம் போட்டுக் கொண்டு உள்ளே நுழைந்த கபாலிகான்,




"பால்காரனா ரஜினி நடிச்ச படம் அண்ணாமலை ஃபாரின் போய் பட்டம் வாங்கியது தலைவர் அண்ணாமலை" என்று பஞ்ச் டயலாக் பேசிக்கொண்டு அமர்ந்தார்.

***ரஜினிக்கும் இப்ப அரசியலுக்கும் என்ன சம்பந்தம்?***

அவர் நேரடியாக அரசியலில் ஈடுபடாவிட்டாலும் ஏதாவது ஒரு விஷயத்தில் அவரைச் சுற்றி தான் அரசியல் நடக்கிறது என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல.

வருடத்தில் நான்கு அல்லது ஐந்து முறை ஏதாவது ஒரு கூட்டத்தில் பேசி அரசியலில் அவர் பேர் சொல்ல பேசும் பொருளாக மாற்றுவது ரஜினியின் வழக்கம்.

***"எப்படி சொல்றீங்க"***

தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ வேலு எழுதிய 'கலைஞர் எனும் தாய்' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற நடிகர் ரஜினிகாந்த், "புதிய மாணவர்களை எளிதாக சமாளித்து விடலாம். இங்க ஏகப்பட்ட பழைய மாணவர்கள் உள்ளனர். அதுவும் சாதாரணமான பழைய மாணவர்கள் அல்ல. அசாத்தியமானவர்கள். யாரும் ஃபெயில் ஆனவர்கள் இல்ல. எல்லாரும் ரேங்க் வாங்கிட்டு கிளாஸ் விட்டு போக மாட்டேனு இங்கேயே இருப்பவர்கள் '' என்று பேசினார்

மேலும் அவர்,'' துரைமுருகன்னு ஒருத்தர் இருக்காரு. கலைஞர் கண்ணுலயே விரல் விட்டு ஆட்டினவர். அவர்கிட்ட ஏதாவது விஷயம் சொன்னால் 'சந்தோசம்' என்று சொல்வார். நல்லா இருக்கு என்று சந்தோசம் சொல்கிறாரா, என்னடா இப்படி பண்றீங்கன்னு சந்தோசம் சொல்கிறாரா என்று புரியவே புரியாது" என்று கூறி விட்டு மேட்டையில் அமர்ந்திருந்த முதல்வரை பார்த்து, "ஸ்டாலின் சார் ஹாட்ஸ் ஆஃப் டு யூ" என்றார். அப்போது அரங்கமே சிரிப்பலையில் அதிர்ந்தது.



ரஜினிகாந்த் பேசிய பிறகு மேடையில் உரையாற்றிய முதல்வர் மு.க ஸ்டாலின், "ரஜினிகாந்த் என்னைவிட ஒருவயது மூத்தவர், அவரது அறிவுரைகளை




ஏற்கிறேன். அவர் கூறியதை நான் முழுவதுமாக புரிந்து கொண்டேன்." என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

இதற்கு பதில் சொல்வதாக அமைச்சர் துரைமுருகன் ரஜினியை பற்றி குறிப்பிட அது பெரிய விவாதமாக, "எங்களுடைய நகைச்சுவையை யாரும் பகைச்சுவையாக பயன்படுத்த வேண்டாம், நாங்கள் எப்போதும்போல நண்பர்களாகவே இருப்போம் "என்று துரைமுருகன் சொன்னார். இதற்குப் பிறகுதான் உதயநிதி துணை முதல்வர் ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது. தி.மு.கவில் இப்படி புயலைக் கிளப்பிய ரஜினி அ.தி.மு.கவிலும், "பத்த வச்சுட்டியே பரட்டை "என்கிற மாதிரி ஒரு சம்பவத்தை செய்து விட்டார்.



***அது என்ன?***

ஜானகி எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ரஜினிகாந்த் காணொலியில் பேசி இருந்தார். தன்னுடைய பேச்சில் ரஜினி, "அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மறைந்த புரட்சி தலைவர் எம்ஜிஆரின் துணைவியாரும் தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் ஆன ஜானகி அம்மாள் நூற்றாண்டு விழா நடைபெறுவது மகிழ்ச்சியை அளிக்கிறது."

என்று சொன்னவர் பேச்சின் நடுவில் இரட்டை இலை சின்னம் அதிமுகவின் பிரம்மாஸ்திரம் என்று குறிப்பிட்டு பேசினார்.

இது அ.தி.மு.க தொண்டர்களுக்கு இடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

***ஓஹோ?***

பொது வெளியில் இப்படி பேசி வந்த ரஜினிகாந்த் தனது சந்திப்பின் மூலம் இன்னொரு அரசியல் அதிர்வை ஏற்படுத்தி விட்டார்.

***என்னது?***

நாம்தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் ரஜினியை சந்தித்தது அடுத்த பேசு பொருளாக மாறிவிட்டது.

***அப்படியா?***

அவர்கள் இவர்களுக்கு இடையே என்ன நடந்தது என்பது வெளிப்படையாக தெரியாவிட்டாலும் சந்திப்பில் உடன் இருந்தவரை பற்றி கேள்விப்பட்டவுடன் அரசியல் அரங்கில் அது எந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது புரிந்து விட்டது.

***யாரது?***

அரசியல் விமர்சகர் என்று சொல்லப்பட்டாலும் முழுக்க முழுக்க பா.ஜ.க ஆதரவு கருத்துக்களை மட்டுமே பேசி வரும் ரவீந்திரன் துரைசாமி தான் அது.

2026 சட்டமன்றத் தேர்தல் வரை அவ்வப்போது ரஜினியின் "வாய்ஸ்" வந்தபடியே தான் இருக்கும். அடுத்த வருடம் சந்திப்போம் வரட்டா என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார் கபாலிகான்.

# கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களின் பண்பலை ஒலிபரப்பு!

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் கே.எஸ். ரெங்கசாமி அவர்களால் 1984ல் கே.எஸ். ரெங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி துவக்கப்பட்டு பின்பு, அவருடைய கடும் உழைப்பினால் பல் மருத்துவக் கல்லூரி உட்பட 17 கல்லூரிகள் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

கே.எஸ். ரெங்கசாமி மறைவிற்குப் பின்பு அவரது புதல்வர் சேர்மன் சீனிவாசனும், உதவி சேர்மன் கே.எஸ். சச்சினும் தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

கே.எஸ்.ஆர். கல்வி நிறுவனங்களில் 1400 பேராசிரியர்களும், 700 இதர பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

தற்பொழுது கே.எஸ்.ஆர். கல்லூரி நிறுவனங்களில் 20ஆயிரம் மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். கே.எஸ். ஆர். கல்வி நிறுவனங்களில்






1572010 ல் கே.எஸ்.ஆர். சமுதாய வானொலி 90.4 பண்பலை ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 25 கி.மீ. சுற்றளவில் உள்ள மாணவ மாணவியருக்கு கல்விவேலைவாய்ப்பு, பொதுமக்களுக்கு விவசாயம், மழைநீர் சேகரிப்பு உட்பட பொதுமக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல நிகழ்ச்சிகளை நடத்தி ஒலிபரப்பு செய்து வருகிறது.

பண்பலை வானொலியில் 8.4. 2022™ K.S.R. கல்வி நிறுவனங்களில் பயிலும் 144 மாணவ மாணவியர்கள் ஒன்றிணைந்து, "நாளைக்கான விதையை இன்றே விதைப்போம்" என்னும் தலைப்பில் தொடர்ந்து 6 மணி நேரம்" பேசி ஒரு புதிய உலக கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளார்கள். அத்தகைய வானொலி திண்டுக்கல் ஆட்டோமைண்ட் இன்போடெக் பி.லிட், கம்பெனி நிர்வாக இயக்குனர் பிரியதர்சினி, சி.ணி.0. காலேப் ஆகியோர்களிடம் கடந்த 241024 ம் தேதி ஒரு நேர்காணலை நடத்தியது.

இந்த நேர்காணலை கே.எஸ். ரெங்கசாமி தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர் மற்றும் 90.4 திவி.ரேடியோ இயக்குனரான டாக்டர் கோபிநாத் நடத்தினார். இந்த நேர்காணலில் மாணவ மாணவியருக்கான சாப்ட்வேர் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் என்னென்ன? சாப்ட்வேர் துறையில் வேலைக்குச் சேர என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி விளக்கிக் கூறப்பட்டது. இந்த நிகழ்வில் திவி ரேடியோ மேனேஜர், உதவி மேனேஜர் மற்றும் ஆட்டோமைண்ட இன்போடெக் பி.லிட். கம்பெனி ஆலோசகர்கள் வளர்மதி, சுகந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# உண்மையே மனதுக்கு நிம்மதி !

கடவுள் எப்போதும் உன் அருகில் இருக்கிறார் என்பதை நினைவில் கொண்டு செயல்படு. வெற்றி பெறுவாய். ஒரு ஊரில் மன்னர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு வேட்டையாடுவதில் அதிக இன்பம்அவர் தமது ஆயுதங்களுடன் காட்டில் கொடிய மிருகங்களை வேட்டையாடி விட்டு நகருக்கு எல்லையில் உள்ள கோயில் மரத்தின் நிழலில் சிறிது நேரம் ஓய்வாக உறங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென்று எங்கிருந்தோ ஒரு கல் வந்து மன்னரைக் காயப்படுத்தி அவர் தூக்கத்தை கலைத்தது. சுற்றி இருந்த காவலர்கள் நாலா பக்கமும் சென்று ஒரு நடுத்தர வயது பெண்ணைப் பிடித்து, அழைத்து வந்து மன்னர் முன் நிறுத்தினார்கள். மன்னர் அந்தப் பெண்மணியைப் பார்த்து. "ஏனம்மா என் மீது கல்லை எறிந்தாய்? அது என் தூக்கத்தை கலைத்ததுடன் என்னையும் காயப்படுத்தி விட்டது" என்றார்.

அதற்கு அந்தப் பெண் அரசரைப் பார்த்து. "மன்னர் பெருமகனே, நான் காட்டில் விறகு வெட்டியும், அவைகளை பொறுக்கியும். நாட்டில் விலைக்கு விற்று அதில் கிடைக்கும் வருமானத்தில் என் குழந்தைகளுக்கு உணவு அளிக்கிறேன். வரும் வழியில் மரத்தில் பழங்கள் இருப்பதைப் பார்த்தேன். என் குழந்தைகளின் நினைவு வந்தது, பிள்ளைகளின் பசியைப் போக்குவது பெற்றவள் கடமை அல்லவா.

அந்தப் பழங்களைப் பறிப்பதற்காக ஒரு கல்லை எடுத்து மரத்தில் எறிந்தேன். தாங்கள் மர நிழலில் உறங்கிக் கொண்டிருந்தது தூரத்தில் இருந்து எனக்குத் தெரியவில்லை. நான் எறிந்த அந்த கல்லானது உங்கள் மீது பட்டு உங்கள் தூக்கத்தை கலைத்ததுடன், உங்களையும் காயப்படுத்தி விட்டது. இந்தத் தவறுக்கு நான் தான் காரணம் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்" என்று வேண்டி நின்றாள்.மன்னர் அந்தப் பெண்மணியைப் பார்த்து "பெண்ணே, நீ செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கின்றாய். அது உன் சிறந்த பண்பு உன்னை மன்னித்து விட்டேன்", என்று கூறியதோட அப்பெண்ணுக்கு இரண்டு பசுக்களையும், கை செலவுக்கு பணத்தையும் கொடுக்க ஆணையிட்டார்.

சுற்றி இருந்த காவலர்கள் மன்னரை நோக்கி, "அரசே, தங்களை கல்லால் அடித்தவளை மன்னித்ததுடன் அவளுக்கு பரிசும் தருகிறீர்கள் இச்செயல் எங்களுக்கு வியப்பு அளிக்கிறது" என்றனர்.

காவலர்களை பார்த்து மன்னர் "காவலர்களே, அறிவற்ற மரம் கல்லால் அடித்தால் பழம் தருகிறது. அவ்வாறு இருக்க அறிவுள்ள நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?. மேலும் அவள் வேண்டுமென்று என்னைக் கல்லால் அடிக்கவில்லை. பழங்களை உதிர்க்கவே கல்லால் அடித்தார் அது தவறுதலாக என் மீது பட்டு என்னைக் காயப்படுத்தியது. அவள் தான் செய்த தவறுக்கு வருந்தி என்னிடம் மன்னிப்புக் கேட்டாள்.

அது மட்டுமல்ல அவள் தன் பிள்ளைகளின் பசியைப் போக்கவே மாத்தின் மீது கல் எறிந்தாள். அது தாயாகிய அவள் கடமை அல்லவா. அவள் அவளுடைய பிள்ளைகளுக்காக அவ்வாறு செய்தாள். நான் என் குடிமக்களுக்காக அவளுக்கு பரிசு வழங்கினேன்" என்றார். காவலர்கள் மன்னரின் விளக்கம் கேட்டுபெரு மகிழ்ச்சி அடைந்தனர். நீதி : செய்த தவறுக்கு வருந்தி மன்னிப்பு கேட்பது சிறந்த குணமாகும். எனவே, நாம் தெரியாமல் தவறு செய்திருந்தால் உரியவரிடம் மன்னிப்பு கேட்டுப் பழக வேண்டும்.செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்பது சிறந்தது.

ஒரே கருத்தில் புரிதல் வேறு வேறாக இருக்கும்போது உங்களின் கருத்து மோதல்களைக் கைவிடுங்கள். எடுபடாத இடத்தில் செய்யும் விவாதம் உங்களின் தனிப்பட்ட மதிப்பைக் குறைத்து விடும். எல்லோருக்கும் அவரவர் தரப்பு நியாயம் இருக்கும். ஆனால் உண்மை ஒன்றே இருக்கும். பொய்களை சொல்லி மாய இன்பத்தில் வாழ்வதை விட. உண்மையை சொல்லி மன நிம்மதியோடு வாழலாம். சகுனிகள் நிறைந்த உலகில், சத்தியத்தை மட்டும் வைத்து, ஒன்றும் செய்ய முடியாது, கொஞ்சம் சாணக்கியத்தனத்துடன், இருப்பதே நல்லது

மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்தது. ஆனால். வேதனை என்னவெனில் அதை பணம் சார்ந்ததாக மாற்றி வைத்துள்ளோம்.



# FOR THE ATTENTION OF E – GENERATION...

**STRESS FREE, MEANINGFUL & HAPPY LIFE....**

**A DOZEN TIPS...**

**"Happy is the person who is entirely self -controlled"**

**1. PRAYER:**

Prayer is the true friend of our soul. Prayer strengthens our mind, develops concentration and gives us immense confidence, Prayer cannot make a mountain smaller but certainly it will make our climbing easier… Prayer will not make our examination easier it would surely make us stronger... Alfred Tennyson says "Prayer could do a lot more than the world could dream of." Life is a drama. The world is a stage. We all are puppets in the hands of the Almighty who is the Director. We just have to play our role. But it is left to us how well we play the role. So, we must take a resolution that whatever we do, we must do the best of our ability. So let us pray…

"Do your best and leave the rest in the Hands of the Almighty"

**2. POSITIVE ATTITUDE:**

Look always at the positive side because most of us generally seek goodness, peace, truth and beauty. Positive thinking lifts the level of life and problems become possibilities, seeming failures are turned to success and despair turns to hope. Utilize every opportunity that knocks at your door. Earnest attempts will bring success at your feet. Let us develop positive attitude and dream for a better tomorrow.

"If you can dream and turn your dreams into reality, the world will be yours and everything that is in it". Dr. APJ Kalam

**3. LEARN TO SAY KIND WORDS:**

Kindness is a universal language that the deaf could hear, the dump could speak and the blind could see. So learn to be kind to the world, the world will kind to you. As Mother Terasa says, "If you could wipe off a single drop of tear, From a single eye, of a single person, on a single day, the world will be fine".

Kindness in words creates confidence, Kindness in thinking creates profoundness, Kindness in giving creates love.

**4. SPREAD THE FRAGRANCE OF HAPPINESS:**

Happiness is not found, but made. The secret of happiness is the contentment. It is to enjoy what you have and put your absolute trust in God. Happiness is like a perfume; you cannot spray on others without getting a few drops on yourself.

"Happy are those who are pure in heart, for they shall see God"

**5. LAUGHTER THERAPHY:**

Laughter is the music of the soul. Laughter is better than medicine. When you laugh, you enhance respiration and help oxide your blood stream to wash out irritating carbon dioxide. Good sense of humor speeds the cure of diseases and help prolong life.

"Everybody laughs the same in every language, Because laughter is a universal connection."

**6. PROMOTE HUMAN VALUES:**

The world today is under the sway of materialistic onslaught and degradation of moral values due to which it is facing on overall turmoil. It is proved beyond doubt by Mahatma Gandhi the Father of our Nation that Satya alone is the sustaining force in this ongoing world. We should honor truth, nonviolence, peace and universal brotherhood. The spirit of integration is the need of the hour.

"Valuables are priced …. Values are priceless"

**7. LEARN TO ACCEPT FAILURES**

Life is a risk and never sorrow free. Life is not a bed of roses. It has thrones too. We should learn how to battle with struggles. Life is always a challenge. Challenges are stepping stones or stumbling blocks. Failure is not the opposite of success. It is just a matter of how you view them. Learn to accept failures gracefully.

"No success ever comes to man on its own... Behind every success there are

Untold stories of trials, miseries, failures and humiliations…"

**8. LIVE GENTLY:**

The gentle breeze, the fragrant flowers, the tinkling waterfalls, the colorful rainbow, the hug of mist, the chillness of Nilgiris, the dignity of trees, the song of

cuckoo, the kiss of a Mother, a smile of a friend and the grace of Mother Terasa are adorable to everyone. So should be the gentleness of an individual. A gentle person always commands respect, never demands.

"To be born as a gentleman is an accident." To live as one is an achievement…"

**9. AVOID NASTY REMARKS:**

Nasty remarks give neither the hearer nor the speaker any satisfaction.

Remember always, when point out your index finger towards others, the rest of the fingers are pointing towards you. No man is perfect on earth. The person who forgives the errors of others develops divine qualities.

"To err is human, to forgive is divine..."

**10. EXTEND A HELPING HAND:**

Helping others at the time of need is a great quality. Whatever good you do to others, either in words or deed, never go a waste. They come back to you in different ways, at different times through known or unknown persons. Being

merciful gives boundless joy. There is no happiness without compassion or empathy.

"The hands that help is holier than the lips that pray... "

**11. HAVE QUALITY FRIENDS:**

A true friend is a push when you are stopped, a word when you are lonely, a guide when you are searching, a smile when you are sad, a song when you are happy. A true friend is gift of God. Mutual trust and confidence are the foundation stones of true friendship.

"One best book is equal to hundred good friends

But one good friend is equal to a library" – APJ KALAM.

**12. THINK DIFFERENTLY:**

In this electronic world everyone wants to be winner. People are running on their toes not knowing their destination. In this fast world a person who thinks differently or thinks out of the box becomes the winner.

"Winners do not do different things…. They do things differently..."

Think It over:

"Our earth is an expensive place to live in... But it does include a free trip around the sun once a year".

Wishing all the Techno-youngsters a Stress free and Happy life.



Dr. **R. RAJAMMAL**. B. Sc., M.A., M.Ed., PGDGC, D.Let

National Awardee Educationist

Woman Achiever & Social Ambassador

Sarvalayam , Vellakoil.



Every year,we the Galaxy of Professors Meet.First and second time we met at Anna University Alumini Club.Third time,we met at New College,fourth time we met at Hotel Morris on Cathedral Road.This time,fifth at the school mentioned in the post.Each time ,we speak about various State,National, International issues which would be highly informative.We discuss about the present deterioration of Education in Schools and Colleges and violence in the campus, Autonmy and the damages it caused on the standard of education etc.Always,we spoke about social issues.Next we propose to invite the press.Slowly,we will build up as a social unit and highlight evils in the public with an optimism that enlightened views will be heard.

All of served in various Government and private Colleges together and retired.To reminisce over our memories we have opened a What's app group and share many things among us.We also arrange meetings annually.

மித்ரா கிட்சன்

# பாஸந்தி





**தேவையான பொருட்கள்:** கொழுப்பு நீக்கப்படாத பால் – 2 லிட்டர், சர்க்கரை – 1/4 கிலோ, நெய் – 1 ஸ்பூன், குங்குமப்பூ – சிறிதளவு, பாதம், பிஸ்தா, முந்திரி.

**செய்முறை:** முதலில் ஒரு அடிகனமான பாத்திரத்தில் இரண்டு லிட்டர் பாலை ஊற்றி அடுப்பில் வைக்கவும்.

மிதமான தீயில் வைத்து பாலை காய்ச்சவும் .பால் நன்கு கொதிக்கும் போது அதனுடன் சிறிதளவு குங்குமப் பூவை சேர்க்கவும் .இப்பொழுது பாலின் நிறம் மாறிவிடும். இப்பொழுது பாலின் மேலே படியும்

பாலாடையை எடுத்து வேறு ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டே இருக்கவும் .பாலை நன்கு கிளறிக் கொண்டே இருக்கவும். பாலின் அளவு அரை லிட்டர் ஆகும் வரை மிதமான தீயில் வைத்து கிளறிக் கொண்டே இருக்கவும் .பிறகு மறுபடியும் அந்த பாலாடையை எடுத்து பாலில் போட்டு கிளறவும்.பிறகு அதனுடன் 1/4 கிலோ சர்க்கரை சேர்க்கவும் .சேர்த்ததும் மிதமான தீயில் கிளறிக் கொண்டே இருக்கவும். ஒரு ஐந்து நிமிடம் கழித்து அடுப்பை நிறுத்தி விடவும்.

அதன் பிறகு முந்திரி பாதாம் பிஸ்தா இவை மூன்றையும் மிக்ஸியில் போட்டு ஒன்றிரண்டாக உடைத்துக் கொள்ளவும்.



பிறகு இதை லேசாக நெய்யில் வறுக்கவும்.வறுத்த முந்திரி பாதாம் பிஸ்தா இவை மூன்றையும் பாலின்மேலே தூவி விடவும் .இப்பொழுது மூன்று மணி நேரம் ப்ரிட்ஜில் வைக்கவும். மூன்று மணி நேரம் கழித்து வெளியே எடுக்கவும் .இப்பொழுது சூப்பரான, அனைவருக்கும் பிடித்த டேஸ்டான அட்டகாசமான சுவையில் பாஸந்தி

**பாலாடையின் பயன்கள்:** பாலாடையில் லாக்டிக் நிறைந்து காணப்படுகிறது. இது ஒரு வகை ஆல்பா ஹைட்ராக்ஸி அமிலம் சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்க பயன்படுகிறது. சருமத்தில் உள்ள அசுத்தங்களை வெளியேற்றுகிறது. பருக்கள் உருவாகும் அபாயம் குறைகிறது.



S.கவிதா
சிட்லபாக்கம்

# மரம் நடும் மாணவச் செல்வங்கள்!

அரசு மேல்நிலைப்பள்ளி கருவாக்குறிச்சியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி பள்ளி தலைமை ஆசிரியர் கலைச்செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ளிழிநிசி  காவேரி அசட் காரைக்கால் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் நிதி உதவியுடன் வனம் தன்னார்வ அமைப்பின் இயக்குனர் வனம் கலைமணி அவர்களின் ஒருங்கிணைப்பில்  வனம்பாரதி, குருமூர்த்தி, வசந்த், சந்திரன் ,ஈஸ்வர சோழன் முதலிய தன்னார்வாளர்களைக் கொண்டு பள்ளி வளாகத்தில் கம்பி வேலி அமைத்து 230 மரக்கன்றுகள் நடப்பட்டது .மரம் நடும் நிகழ்ச்சியை பள்ளி வளர்ச்சி குழு தலைவர் முனைவர் சொக்கலிங்கம்,துவக்கி வைத்தார். கழகத் தலைவர் கோபாலகிருஷ்ணன் பள்ளி மேலாண்மை குழு தலைவர் ஜோதி, ஊராட்சி மன்ற தலைவர் சோனியா, செயற்பாட்டாளர் பாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர் .பள்ளி வளாகத்தில்.இருபால் ஆசிரிய பெருமக்களும், மாணவ மாணவர்களும் புங்கன் 40 ,வேம்பு 30 இலுப்பை 30 மகிழம் 20 நாவல் 40 நீர்மருது 50 மா 20 கொய்யா 20 கொடுக்காப்புளி 20 என ஆக மொத்தம் 230 மரக்கன்றுகளை நடவு செய்தனர். இறுதியாக பள்ளி தலைமை ஆசிரியர்  கலைச்செல்வன் வனம் தன்னார்வ அமைப்பாளர்களுக்கு புத்தகங்கள் பரிசளித்தார்.









# சிறுதானிய கண்காட்சி



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஸ்ரீ சரஸ்வதி பாடசாலா மகளிர் மேல்நிலை பள்ளியில், கும்பகோணம் கல்வி மாவட்ட பள்ளிகளுக்கான "சிறு தானிய உணவு பயிற்சிகருத்தரங்கம் மற்றும் கண் காட்சி 11.11.24 அன்று, கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் திரு. சு. ப. தமிழழகன் அவர்களால் துவக்கி வைக்கபெற்றது. 300 மாணவர்கள் பங்கு பெற்றனர். 10 பள்ளிகள் சிறுதானிய உணவு கண்காட்சி அரங்கு ஏற்பாடு செய்தனர்.தஞ்சாவூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நேர்முக உதவியாளர் தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைமை ஏற்றார். சிறப்பு பயிற்சி சிவசங்கர் மற்றும் பேபி லலிதா ஆகியோரால் வழங்கப்பட்டது.சிறந்த பள்ளிகளுக்கு பரிசுகள் மற்றும் பங்கேற்ற அனைத்து மாணவர்கள், மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடு பள்ளி தலைமை ஆசிரியை லதா, தஞ்சாவூர் மாவட்ட சுற்றுசூழல் திட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர், முனைவர். பா. ராம் மனோகர், (சுற்றுசூழல் துறை, சென்னை 15) மற்றும் மாவட்ட சுற்றுசூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர்(முதன்மை கல்வி அலுவலகம், தஞ் சாவூர் )திருமதி. எஸ். முத்தமிழ் செல்வி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.











# மகளின் உலகம் அப்பா தான்!



பெற்றெடுத்து தாலாட்டி, சீராட்டி, பாலூட்டி வளர்த்தாலும் பெண்களுக்கு எப்போதுமே அப்பா மீது தான் அதீத அன்பு. மகன் மீது தாய்க்கு அதீத அன்பு.

பெண்ணின் திருமண வயது வரும்போது "அப்பா தான் உலகம்" எனும் நிலைக்குப் பெண்கள் வந்து விடுவார்கள். அதுவரை சலிக்காத வழிகாட்டலும், பொறுமையான அணுகு முறையும்,நிபந்தனையற்றை அன்பும் நீங்கள் காட்ட வேண்டியது அவசியம்.

சின்ன வயதிலிருந்தே தந்தையின் வழிகாட்டுதலிலும், அன்பிலும் வளரும் குழந்தைகள் நல்ல மன வளர்ச்சி அடையும் என்கிறார் எழுத்தாளரும் மருத்துவருமான மெக் மீக்கர். அப்பாவின் வழிகாட்டுதலே டீன் ஏஜ் பெண்களுக்கு மிக மிகத் தேவை என்கிறார்.

"என் பொண்ணோட வாழ்க்கையில் மிக முக்கியமான நபர் நான்" என்னும் எண்ணம் அப்பாக்களுக்கு வர வேண்டியது தான் முதல் தேவை என்கிறார் இவர். , *உங்கள் மகள் வளர்கிறாள் என்றதும் தள்ளியே நிற்காதீர்கள். அது மன அளவில் உங்கள் டீன் ஏஜ் மகளைப் பாதிக்கும் என்கின்றனர் உளவியலார்கள்.

*உங்கள் மகளின் தோளைத் தட்டிப் பாராட்டுவதோ, தலையைக் கோதிப் பாராட்டுவதோ, செல்லமாய் அரவணைத்துக் கொள்தலோ அவளுக்கு ரொம்பவே தேவை.

அடிக்கடி வெளியே கூட்டிப் போங்கள். ஐஸ்கிரீம் பார்லர் போன்ற இடங்களுக்கு ஜாலியாகப் போய் வாருங்கள்.

மகளுடன் நிறைய நேரம் செலவிடுங்கள். நிறைய நேரத்தை நீங்கள் அவளுடன் செலவிடும்போது அவளுக்கு இயல்பான உரையாடல் சாத்தியப்படுகிறது.

நினைத்ததை எப்படியேனும் வெளிப்படுத்தி விடுவாள். அவள் பள்ளியிலோ, கல்லூரியிலோ ஏதேனும் விழா நடக்கிறது , அழைக்கிறாள் என்றால் தவற விடாதீர்கள்.

வெறுமனே நீங்கள் அவளுடன் இருந்தால் போதும் அவள் உங்களை ரொம்பவே கொண்டாடுவாள்.

நீங்கள் அவளை அன்பு செய்கிறீர்கள் சரி ! மதிக்கிறீர்கள் சரி ! ஆனால் அதை அவளிடம் வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறீர்களா? இல்லையேல் அதைச் சொல்லுங்கள் முதலில்.

டீன் ஏஜ் மனது எதிலும் வெளிப்படையாய் இருக்க விரும்பும் மனது. சுற்றி வளைத்து எதையும் பேசாமல் , உங்கள் மகளை நீங்கள் மதிக்கிறீர்கள், அன்பு செய்கிறீர்கள் என்பதைச் சொல்லி விடுங்கள்.

டீன் ஏஜ் மகளின் தினசரிகள் பல்வேறு அனுபவங்களால் நிரம்பி வழியும். ஆனந்தம், கவலை, எரிச்சல், சோகம் என எக்கச்சக்க உணர்வுகள் நிரம்பி வழியும்.

சக தோழிகளின் கிண்டல், படிப்பு, அழகு என கண்டதுக்கும் கவலைப்படும் வயது அது. அதை முதலில் நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். "எதுவானாலும் கவலையில்லை .... அப்பா இருக்கிறார்" என்னும் நம்பிக்கையை நீங்கள் உங்கள் மகளிடம் ஊற்ற முடிந்தால் அதை விடப் பெரிய விஷயம் ஏதும் இல்லை.எப்போதும் அவளிடம் தோழமை உணர்வுடன் பழகுங்கள். அடிக்கடி உங்கள் மூடு மாறாமல் இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம். "அப்பா எப்போ அமைதியா இருப்பாரு, எப்போ எரிஞ்சு விழுவாரு ன்னு தெரியாது " என்னும் நிலமை வந்தால் சிக்கல் தான்.

அவளுடைய படிப்பு, நட்பு, எல்லாவற்றிலும் உங்கள் அளவான ஈடுபாடு இருக்கட்டும். "அவளுக்கு இதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை" என்று மட்டும் எப்போதும் நினைக்காதீர்கள். குறிப்பாக ஆண்களைப் பற்றியும், ஆண்களின் குணாதிசயங்கள், சிந்தனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றைப் பற்றியும் அவளுக்குப் புரியும் வகையில் அவ்வப்போது சொல்வது அவசியம். அப்பா என்பவர் வெறும் ஒரு நபரல்ல ஒரு நண்பன் ! பாதுகாவலன் ! ஊக்கமூட்டுபவர் ! உற்சாகப்படுத்துபவர் ! தன்னம்பிக்கை வளர்ப்பவர் ! நம்பிக்கை ஊட்டுபவர் ! பண்புகளை ஊட்டுபவர் !வழிகாட்டி ! என்று தன் மகளின் மனதில் நம்பிக்கை ஊட்டுபவர் அப்பா.

தொடர் 31

## நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

# மாத இதழ்கள் நின்று போனது ஏன்?

துடுப்பதி ரகுநாதன்

மித்ரா டைம்ஸ் மாத இதழில் இரண்டு வருடங்களாக எழுதிக் கொண்டு வருகிறேன். புத்தகம் மாதா மாதம் தபாலில் வீட்டுக்கு வருகிறது. தமிழில் வந்த பல நல்ல பத்திரிகைகள் நின்று போய் விட்டன. அது என் போன்ற வாசகர்களுக்கு மட்டுமல்ல, அந்தப் பத்திரிகை நடத்தும் முதலாளிகள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஏன் ஏஜண்ட் களுக்கும் வருத்தம் தான்!

அதை சீர் செய்ய பத்திரிகை முதலாளிளும் ஆசிரியர்களும் பல முயற்சிகள் செய்தும், அது பயனற்றுப் போய் வருவதையும் நான் பார்த்திருக்கிறேன். அதற்கு முக்கிய காரணம் பத்திரிகைகளின் விற்பனை குறைந்து கொண்டே வந்ததுதான்!

விற்பனை குறைவுக்கு உள்ள ஒரு முக்கிய காரணம் செல் போன் வருகை! சினிமா மோகம் என்று யோசித்து விட்டு எல்லோரும் பேசாமல் இருந்து விட்டார்கள்! இந்த நேரத்தில் நான் கவனித்த ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் பிறந்தது ஒரு சிறிய கிராமம்! அதில் ஐந்தாறு பெட்டிக்கடை, மளிகை கடைகள் தான் 50 வருடங்களுக்கு முன்பு இருந்தது.!

அந்த கடைகளில் கீழே கயிறு கட்டி அதில் தினத் தந்தி, தினமலர் போன்ற பத்திரிகைகள் தொங்க விட்டிருப்பார்கள். மேலே பல மிட்டாய் ஜாடிகள் வைத்திருப்பார்கள். அதற்கு இடையே அந்த வராம் வந்த ஆனந்த விகடன், குமுதம் போன்ற சில இதழ்களை சொருகி வைத்திருப்பார்கள்.நான் அந்த பத்திரிகை வரும் நாளில் போய் வாங்கி வருவேன். அந்தக் காலத்தில் எங்கள் கிராமத்தில் படித்தவர்கள் நிறைய இல்லை! அதுவும் இதழ்களை பொழுது போக்குக்காகப் படிப்பவர்கள் மிகக் குறைவு. ஆனாலும் எல்லாப் பெட்டிக்கடைகளிலும் வார இதழ்கள் கிடைக்கும். அதன் பின் காலப் போக்கில், நான் படித்து வேலைக்கு வந்த பின், ஈரோடு, கோவை, திண்டுக்கல், சேலம், சென்னை என்று பல ஊர்களில் சுமார் 35 வாடகை வீடுகளில் குடியிருந்து, 25 வருடங்கள் டூவீலரில் வேலைக்குப் போய் வந்திருக்கிறேன்.

வேலைக்குப் போகும் அவசரத்தில் ஏதாவது பேப்பர் தொங்கும் பெட்டிகடையில் டூவிலரை நிறுத்தி அந்த அந்த நாளில் வரும் இதழ்களை வாங்கி பெட்டியில் போட்டுக் கொண்டு போய் இரவு தான் அந்த இதழ்களை எடுத்துப் படிப்பேன். என் நண்பர்களும் அப்படித்தான்! இந்த அவசர உலகில் கடைகளுக்கு முன்பு நின்று வார இதழ்களை எல்லாம் பார்க்கும் பழக்கம் வாசகர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் போய் விட்டது

தமிழ் நாட்டில் பல நகரங்களில் இருக்கும் என் போன்ற பல வாசகர்களை நான் கவனித்திருக்கிறேன்.. எல்லோரும் இதழ்களை வாங்கி அதை பிரித்துக் கூட பார்க்காமல் பைகளில் போட்டுக் கொண்டு வேலைக்கு ஓடுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்களும் தங்கள் வீடுகளுக்குப் போய் இரவு தான் இதழ்களை எடுத்துப் படிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

காலப் போகில் பல இதழ்கள் இலவச இணைப்புகளை கொடுத்தார்கள்.

பல பெட்டிக் கடைகளில் இலவச இணைப்பை பத்திரிகைகளோடு சேர்த்துக் கொடுப்பதில்லை! கேட்பவர்களுக்கு மட்டும் தருவார்கள்.

எங்கோ தொலைவில்போகும் வழியில் டூவீலரை நிறுத்தி வாங்கிய இதழ்களுக்கு இலவச இணைப்புகளை நேரில் போய் வாங்கும் பழக்கத்தை வாசகர்கள் விட்டு விட்டார்கள்.அதன் பின் சில வருடங்கள் கழித்து பத்திரிகைகள் விற்பனையை பெருக்க பல பரிசுப் பொருட்களையும் சேர்த்துக் கொடுக்கத் தொடங்கினார்கள். பெட்டிக் கடைகளில் அவைகளை தனியாக எடுத்து வைத்துக் கொண்டு பத்திரிகை வாங்குபவர்கள் கேட்டால் மட்டும் அதை தருவார்கள்! இரண்டு நாள் கழித்து அதே கடைக்குப் போய் அந்தப் பரிசுப் பொருட்களை கேட்டால் "நீங்க எப்பொழுது வந்து என் கடையில் புத்தகம் வாங்கினீர்கள்.. அப்பொழுதே ஏன் கேட்டு வாங்காமல் இரண்டு நாள் கழித்து வந்து இப்படிக் கேட்டால், எங்களுக்கு அதை நினைவில் வைத்துக் கொண்டு உங்களுக்கு கொடுப்பது தான் வேலையா என்று கேட்பார்கள்! அதனால் கொஞ்சம் கொஞ்சமாக பெட்டிகடைகளில் இதழ்கள் வாங்கிப் படிப்பதை வாசகர்கள் விட்டு விட்டு, செல் போனில் அவர்களாக ஒரு நண்பர்கள் குழுவை ஏற்படுத்திக் கொண்டு, ஒருவர் நிஞிதி ல் இதழ்களை போட செலவு இல்லாமல் அந்த வாசகர்கள் இதழ்களை படிக்கத் தொடங்கி விட்டார்கள்.

அதனால் பெட்டிக் கடையில் இதழ்கள் விற்பது நின்றே போய் விட்டது. நூறு கடைகளில் இதழ்கள் விற்று கொண்டிருந்தது போய் இரண்டு கடைகள், மூன்று கடைகளில் தான் வார, இதழ்கள் விற்கும் நிலைக்கு தள்ளப் பட்டன.

இன்று கூட நான் சிரமப் பட்டு டூவீலரில் போய் தான் அந்தப் பெட்டிக் கடையைத் தேடிப் பிடித்து அந்த இதழ்களை வாங்கி டூவீலர் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு வீட்டில் வந்து படிப்பேன்.

எங்கள் வீட்டில் என் மனைவியும் என்னை விட நிறைய பெண்கள் இதழ்களைத் தேடித் தேடிப் படிப்பாள். போன வாரம் குங்குமம் தோழி இதழ் வந்தது. வாங்கி தரும் நாள் வரை கேட்பாள் என்று அன்றே போய் அந்த இதழ் வாங்கி வந்து கொடுத்து விட்டேன்.

இரண்டு மணி நேரம் கழித்து "இதழோடு வந்த இலவசம் எங்கே?" என்று கேட்டாள். "எனக்கு தெரியாது!"... என்றேன்.

" அட்டையில் போட்டிருக்கிறதே...அதைக் கூடப் பார்க்காமல் எதற்கு புத்தகம் வாங்குகிறீங்க?.." என்றாள். "ரோட்டில் நின்று கொண்டு புத்தகம் படிப்பது தான் என் வேலையா?.." என்றேன் நானும் கோபமாக.

மறு நாளும் விடாமல் கேட்டாள். இந்தப் பெண்களே சுத்த மோசம்... எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்ற வருத்தம் தான் எனக்கு ஏற்பட்டது! எனக்கும் என் மனைவிக்கும் திருமணமாகி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக எங்களுக்கு கொள்ளுப் பேரன் பேத்தி எடுக்கும்வரை குடும்ப சண்டை சச்சரவு வந்ததில்லை! இது போன்ற விஷயங்களில் எனக்கும் அவளுக்கும் கருத்து வேறுபாடு வரும்!

" பெட்டிக் கடைக்காரன் புத்தி அவ்வளவு தான்!... விட்டுத் தொலை!..." என்றால் அவள் விட மாட்டாள். நான் வேறு வழி இல்லாமல் அந்த பெட்டிக் கடைக்குப் போய் அந்த இலவசப் பொருளை வாங்கி வந்து எரிச்சலோடு நேற்று என் மனைவியிடம் நீட்டினேன்.

"அவள் கொஞ்சம் நில்லுங்க!..." என்று என்னை நிறுத்தி வைத்து அந் இலவச பவுடர் டப்பாவில் போட்டிருக்கும் விலையைக் காட்டினாள். அதில் அதன் விலை ரூபாய் 100 என்று போட்டிருந்தது, அந்தப் பவுடரைத் தான் அவள் உபயோகிப்பாளாம்! "குங்குமம் தோழி விலை 25 ரூபாய்! அவர்கள் நமக்கு இலவசமாக 100 ரூபாய் பவுடர் தருவதை விட்டு விட்டு, மறுபடியும் அதே கடைக்குப் போய் நூறு ரூபாய் பணம் கொடுத்து இதே பவுடரை எனக்கு வாங்கி வருவீர்கள்! நீங்க முப்பது வருஷம் பாங்கில் வேலை செய்து இதைத் தான் கற்றுக் கொண்டு வந்தீர்களா?..." என்றாள்.இந்தப் பெண்களை சமாளிப்பது மிக கஷ்டம் தான்! அதை விட்டுத் தள்ளுங்க... பத்திரிகை, புத்தகம் விற்கும் கடைக்காரர்களின் இந்த மனப் போக்கு காரணமாகத் தான் பெட்டிக்கடைகளில் இதழ்களை வாங்குவதை நிறுத்தி விட்டு பல வாசகர்கள் போனில் பத்திரிகை வாசிப்பதை நான் பார்த்திருக்கிறேன்!

# எம் பதில்கள்

**எத்தனை இடர்பாடு இருந்தாலும் சிலர் சாதனை புரிகிறார்களே!**

*- பி. பரந்தாமன் ராஜபத்மபுரம்*

உண்மைதான். சாதிக்க வேண்டும் என்று முடிவு எடுத்து விட்டால் அதற்கு மனம் தான் துணையாக நிற்க வேண்டுமே தவிர உடல் அல்ல. சுற்றியுள்ள உறவுகள் அல்ல. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன இயலாத உடல் நிலையிலும் சாதனை புரிபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு செய்தியை சொல்லுகிறேன்.

இந்த படத்தில் புன்சிரிப்புடன் உள்ளவர் பெயர் சால்வா ஊசேன். இவரின் சிறப்பு இவருக்கு இருதயம் இல்லை. உலகத்தில் அரிதினும் அரிதானவர். முதுகில் சுமக்கும் பையில் தான் அவரின் செயற்கை இருதயம் உள்ளது.

39 வயதான இவருக்கு கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகள் உண்டு. 6.8 கிலோ கணம் கொண்ட கருவியில் இரண்டு பேட்டரிகள் இருக்கும். அது காற்றை அந்த கருவியில் அனுப்பி இரத்த ஓட்டம் அவர் உடம்பில் நடக்க உதவுகிறது .

அந்த பெண்ணுக்கு முன் நம் கவலைகள், பிரச்சனைகள் ஒன்றுமே இல்லை . எப்போதும் சிரிப்புடன் தான் இருப்பார்.



மழை பெய்கிறது, வெய்யில் இப்படி அடிக்கிறது,தினசரி பேப்பர் வரவில்லையே , பறவையின் சத்தம் , தேநீரில் சர்க்கரை இல்லை என்று பலவிதமான காரணங்களுக்கு மக்கள் மனம் அமைதி இழந்து விடுகிறார்கள். இவரை நினைத்தால் நாம் கடவுளுக்கு, எந்த நிலையில் இருந்தாலும் நன்றி சொல்லுவோம்.

**வெற்றி பெற ஒரு வழி சொல்லுங்களேன்!**

*- இசக்கிமணி, செய்துங்கநல்லூர்.*

வெற்றி என்பது அவரவரின் முயற்சியால் கிடைப்பது .முயற்சி இல்லாமல் வெற்றி சாத்தியமில்லை. நாக்கையும், பணப்பையையும் அதிகமாகத் திறக்காதீர்கள். அப்போதுதான் உங்கள் மதிப்பும் செல்வமும் வளரும்.

- பாரசீகப் பழமொழி.

வாழக்கையில் பணமா முக்கியம் என்று சொல்லி முடிப்பதற்குள் பளார்ன்னு கன்னத்துல அறைஞ்சு பணம் மட்டும் தான் முக்கியம்ன்னு சொல்லி விடுகிறது வாழ்க்கை வெற்றியை நோக்கி ஓடுங்கள்.

தேன் கூட்டில் இனிப்பது தேனல்ல "உழைப்பு" கூட்டைப் பிளந்து வெளியே வருவது குஞ்சுகளல்ல "விடாமுயற்சி".

பாறைகளின் இடுக்குகளில் வளர்வது தாவரங்கள் அல்ல “தன்னம்பிக்கை".ப்தோல்வி உங்களைத் துரத்தினால் வெற்றியை நோக்கி ஓடுங்கள்.

என்ன நடந்தாலும் எடுத்த கொள்கையில் உறுதியாய் இருங்கள். ஏனென்றால், புதிய பாதையில் பயணிக்க முயற்சிக்கும் போது ஆதரவுகளை விட, எதிர்ப்புகளையும் பயத்தை விதைப்பவர்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

எந்த முயற்சியும் எடுக்கும்போது அது நடக்குமா இது போகுமா அது வருமா என்றெல்லாம் கேள்வி எடுத்துக் கொண்டிருக்காமல் எடுத்த செயலில் துணிவோடு செயல்பட வெற்றி பெறுங்கள்.

**மழைக் காலங்களில் நம்மை தடுமாற வைத்து**



விடுகிறதே!

*– பொன்.வேலாயுதம், தொழுதாவூர்*

மனிதனின் முக்கிய ஆதாரம் நீர். "நீரின்றி அமையாது உலகு" என்பார்கள். அந்த நீருக்கான ஆதாரம் மழை.

"மாதம் மும்மாரி பொழிகிறதா? என்று அன்று நாட்டை ஆண்ட மன்னர்கள் கேட்டதாக கேள்விப்பட்டிருக்கிறோம். மாறிவரும் பருவ நிலைகளால் மழையில் பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்யாமலும், அப்படி செய்யும் போது ஒட்டுமொத்தமாக ஒரே நாளில் கொட்டித் தீர்ப்பதும் சில வருடங்களாக தொடர்ந்து வருகிறது. அதற்காகத்தான் நமது முன்னோர்கள் குளம் ,குட்டை , கால்வாய், ஏரி என்று பல நிலைகளில் நீரை சேமித்து வைத்தார்கள். அது விவசாயம் போன்ற அத்தியாவசிய

தேவைக்கு உபயோகிக்கவும் பயன்பட்டது. மழை எப்படிப்பட்டது என்பதை திருவள்ளுவர் தனது குறளில் தெரிவிக்கிறார். "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை"

இதன் பொருள்,

பெய்யாமல் விடுத்து உயிர்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியதும், பெய்வதன் காரணமாக உயிர்களின் நலிந்த வாழ்வுக்கு வளம் சேர்ப்பதும் மழையே ஆகும்.

**அமெரிக்க அதிபர் பதவியேற்பு இந்தியாவுக்கு சாதகமா பாதகமா?**

*– செந்திலாண்டவர், சீர்காழி*

அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப், பிரதமர் நரேந்திர மோடியுடன் மிகவும் நல்ல உறவைக் கொண்டுள்ளார்.

தனது முதல் பதவிக் காலத்தில் இந்தியாவுடன் நல்லுறவு கொண்டிருந்தார். அதே விஷயங்களை வருங்காலத்திலும் தொடர வாய்ப்பு உள்ளது என்றே கூறலாம். அமெரிக்க இந்திய உறவை தற்போது

மேலும் வலுப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டிரம்ப் பதவியேற்றது இந்தியாவிற்கு நிசசயம் சாதகமே!

டிரம்ப் 'அமெரிக்கா ஃபர்ஸ்ட்' என்ற முழக்கத்தை முன்வைத்திருக்கிறார். எனவே, அமெரிக்க பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிக்கு அதிக வரி விதிக்கும் நாடுகள் மீது அவரின் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம். இந்தியாவும் அதன் வரம்புக்குள் வர வாய்ப்புள்ளது."

அப்போது பொருளாதார ரீதியாக இந்தியாவுக்கு சிரமங்கள் ஏற்படலாம் என்றும் சில பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்



# புறம் பேசும் மனிதர்களை புறந்தள்ளுங்கள்!

பயணம் தடம் மாறாதது.

ஒருவரின் பின்னால் பேசும் வார்த்தைகள் அனைத்தும்.

பேசுபவர்களின் காலத்தையும் நேரத்தையும் விரயமாக்குகிறார்கள் என்பதைஅறியாதவர்கள்.

1) ஒருவர் பொறுமைசாலியா என்பதை அறிய...

கூட்டம் நிறைந்த இடத்திலும், வரிசையில் நிற்கும் பொழுதும் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதை வைத்து அறியலாம்.

2) ஒருவர் நம்பகத்தன்மை உள்ளவரா என்பதை அறிய...

அவர் உங்களிடம் பேசும் பொழுது அடுத்தவரைப் பற்றி கிசுகிசுக்கிறாரா என்பதை வைத்து அறியலாம்,

அவர் உங்களிடம் பணமோ அல்லது பொருளோ இரவலாக வாங்கியதை, நீங்கள் கேட்காமலேயே உங்களிடம் திரும்பத் தருகிறாரா என்பதை வைத்தும் அறியலாம்.

3) ஒருவர் நேரம் தவறாதவர் என்பதை அறிய...

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சந்திக்கலாம் என்று கூறுங்கள். சரியான நேரத்திற்கு, எந்த ஒரு சாக்கு போக்கும் கூறாமல் வருகிறாரா என்பதை வைத்து அறியலாம்.

4) ஒருவர் அடுத்தவரைப் புரிந்து கொள்பவர் என்பதை அறிய...

நீங்கள் பேசும்பொழுது, குறுக்கிடாமல் கவனித்துவிட்டு பின்னர் அதற்கு ஏற்றாற்போல் பதில் அளிக்கிறார் என்பதை வைத்து அறியலாம்.

5) ஒருவர் எளிமையானவர் என்பதை அறிய...

அடுத்தவரை கனிவாக நடத்துகிறார் என்பதை வைத்து அறியலாம்.குறிப்பாக, உணவகங்களில் சர்வர்களையும், கார் ஓட்டுனர்களையும் எவ்வாறு நடத்துகிறார் என்பதை வைத்து அறியலாம்.

கோபத்துல வார்த்தையை விடுகிறவர்களை கூட நம்பிடலாம். ஆனால். கோபத்தை காட்டாதவர்களை மட்டும் நம்பவே கூடாது.

புரிதல் இல்லாத வாழ்க்கையில்.. புதையலே கிடைத்தாலும் பயனில்லை..

என் பாதையில் ஆயிரம் தடுமாற்றம் வரலாம். ஆனால் என்பயணம் என்றும் தடம் மாறாதது என்று எப்போதும் எண்ணுங்கள்.

# ஒழுக்கம் உடையவர் வாழ்வில் தோல்விகளே இல்லை!

கடின உழைப்பு தனிநபர் ஒழுக்கத்தை படம் பிடித்துக் காட்டுகிறது. சீரான முறையில் வாழ் வதற்கும்,நேர்மறையாக செயல்கள் இருப்பதற்கும், வெற்றிகளைத் தொடர்ந்து பெறுவதற்கும் ஒழுக்கம் மிக மிகத்தேவை. சூழ்நிலை சாதகமாக இருக்கும்போது உழைப்பை எல்லோரும் விரும்புவர். சூழ்நிலை கடினமாகும்போதும், எதிர்ப்புகள் வலுக்கும்போதும், விட்டுவிடாமல் விடாப்பிடியுடன் முயன்று உழைப்பவர் அவரின் தனிப்பட்ட குணத்தை வெளிப்படுத்தத் தான் செய்கிறார். அத்தகைய சூழலில் வெற்றிபெற கடின உழைப்புடன் கூட இருப்பது தனிநபர் ஒழுக்கமே.

நம் ஒழுக்கத்தை வைத்தே நாம் யார் என்பதை மற்றவர்கள் தீர்மானிக்கிறார்கள். ஒழுக்கம் இல்லாதவரின் கடின உழைப்புக்கு எதிர்பார்த்த பலனைத் தர சமுதாயம் தயாராக இருப்பதில்லை. ஒழுக்கம் தனிப்பட்ட வாழ்க்கையையும், பணியையும், செயல்திறனையும் பாதிக்கிறது. செயலின் மீது கவனம் செலுத்தவும், மற்றவர்களால் மதிக்கப்படவும், ஆரோக்கியமாக இருக்கவும், சுறுசுறுப்பாக செயல்படவும், எதிர்ப்புகளைத் தாங்கவும், சுயக்கட்டுப்பாட்டுடன் செயல்படவும், மன அழுத்தம் இல்லாமல் உழைக்கவும் ஒழுக்கம் காரணமாக இருக்கிறது.

முன்னேற்றத்திற்கும், கடின உழைப்புக்கும் இன்றியமையாத தேவை நேர்மை. நம்மிடம் நாமே நேர்மையாக இருக்க வேண்டியது முதல்படி மற்றவர்களிடம்நேர்மையாகஇருக்க வேண்டியது அடுத்தபடி. நேர்மை உள்ள போதுதான் தோல்விகளை ஒப்புக்கொள்ள முடியும். திறன் குறைபாடுகளைக் கண்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். தெளிவான கொள்கைகளை மேற்கொள்வதற்கும், தெளிந்த இலக்குகள்




அமைப்பதற்கும் நேர்மை முக்கியம். நேர்மை உள்ள போதுதான் கடின உழைப்பு சரியான பாதையில் சென்று சரியான பலனைத்தரும்.

கடின உழைப்பைச் சார்ந்து இருக்கும் மற்றொரு குணம் உதவி செய்தல். நாம் மற்றவர்களுக்கு உதவும்போது நம் உழைப்பிற்கும் மற்றவர்கள் தாமாக முன்வந்து உதவுவர். வெற்றி பெரும்பாலும் பலருடைய உழைப்பைச் சார்ந்து இருப்பதால் நம் உதவுதல் மொத்தக் குழுவின் திறனையும் உயர்த்தும். இதன் மூலம் நம் தலைமைப் பண்பு அதிகரிக்கும். நம் கடின உழைப்பு தானாகவே மகிழ்ச்சியான அனுபவமாக மாறும்.

கடின உழைப்பின்போது தேவையற்ற எதிர்மறைப் பழக்கங்களைக் களைந்துவிடுதல், வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தும். உடல் நலத்தின் மீது அக்கறை காட்டுதல், நிதி மேலாண்மை குறித்து கவனமுடன் இருத்தல், நேரத்தை விரயம் செய்யாமல், தீய பழக்கங்களை தவிர்த்தல் முதலியன உழைப்பின் மீதான ஈடுபாட்டை அதிகரிக்கும். ஒழுக்கம் உடையவர் வாழ்வு தோல்விகளை காண்பதில்லை.

# அமெரிக்காவில் படிக்கும் மாணவர்கள் இந்தியா முதலிடம்



நடப்பு கல்வியாண்டில்,அமெரிக்காவிற்கு அதிக மாணவர்களை அனுப்புவதில், சீனாவை பின்னுக்கு தள்ளி, இந்தியா முதலிடத்திற்கு வந்துவிட்டது என சர்வதேச கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கல்வி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அமெரிக்காவிற்கு படிக்க செல்லும் சர்வதேச மாணவர்களில் முதலிடம் வகித்த சீனாவை, 15 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் இந்தியா முதலிடத்திற்கு வந்துள்ளது. கடைசியாக 2009ஆம் ஆண்டு இந்தியா முதலிடம் பிடித்திருந்தது.

அமெரிக்கக் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் இந்தியா, 23 சதவீத உயர்வைக் கண்டுள்ளது. சீனா 4 சதவீத சரிவைக் கண்டது.

3.3 லட்சம் இந்திய மாணவர்கள் அமெரிக்காவில் படிக்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கல்வி நிறுவனத்தின் சி.இ.ஓ., ஆலன் குட்மேன் கூறுகையில், சர்வதேச மாணவர்களில்,இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் பாதியை அமெரிக்காவிற்கு அனுப்புகின்றன.



எஸ்.ஜானகி

இந்த மாணவர்கள் கணினி அறிவியல், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய படிப்புகளைப் படிக்கின்றனர்.

சர்வதேச மாணவர்கள் எங்கள் வளாகங்களை வளப்படுத்துகிறார்கள், கலாச்சார பரிமாற்றத்தை வளர்க்கிறார்கள் மற்றும் நமது பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறார்கள். அமெரிக்காவில், சர்வதேச மாணவர்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது பட்டதாரி திட்டங்களில் 19 சதவீத அதிகரிப்புடன் காணப்படுகிறது.

பல நடைமுறை பயிற்சி வகுப்புகள் கூட 41 சதவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக தொற்றுநோய்க்குப் பிறகு மாணவர்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இந்திய மாணவர்கள் அமெரிக்க பொருளாதாரத்திற்கு 50 பில்லியன் டாலர்கள் பங்களிப்பு அளிக்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையில் 7 சதவீத அதிகரிப்புடன், அமெரிக்கப் பொருளாதாரத்திலும் அவர்கள் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவ்வாறு ஆலன் குட்மேன் கூறினார்.



# வேர் இன்றி மரம் ஏது!

ஒரு கிராமத்தில் யார் அறிவாளி என்று ஒரு போட்டி!

இளைய தலைமுறை தான் அறிவாளிகள் என்று இளைஞர்கள் சொல்ல!

வயதில் பெரியவர்கள் தான் என்று பெரியவர்கள் சொல்ல!

சரி யார் அறிவாளிகள் என்று பார்க்க இருவருக்கும் ஒரு செடியை கொடுத்து ஒரு மாதம் டைம் கொடுத்து யார் இந்த செடியை நன்றாக வளர்க்கிறார்கள் என்று பார்க்கலாம் என்றார்கள்!

இளைஞன் செடியை நல்ல இடமாக தோண்டி நட்டு வைத்து தினமும் நீரும் உரமும் தெளித்து நன்றாக வளர்த்தான்!

ஆனால் பெரியவர் நட்டு வைத்ததோடு சரி! தண்ணீரும் ஊற்ற வில்லை உரமும் போட வில்லை!

ஒரு மாதம் ஓடியது இளைஞன் வைத்த செடி நன்றாக வளர்ந்து இருந்தது.

பெரியவர் வைத்த செடி சிறியதாக வளர்ந்து இருந்தது.

அன்று இரவு திடீர் என்று பெரிய காற்றுடன் மழை !

இளைஞன் வைத்த செடி காற்றில் ஒடிந்து மழையில் அடித்து செல்லப்பட்டது!

ஆனால் பெரியவர் வைத்த செடி அப்படியே மழை புயல் தாங்கி நின்றது!

மறு நாள் காலை இளைஞன் பெரியவர் கிட்ட இது எப்படி சாத்தியம்! நான் தினம் நீர் ஊற்றி உரம் போற்று நன்றாக வளர்ந்து இருந்த செடி ஒடிந்து மழையில் அடித்து செல்லப்பட்டது! நீங்கள் தண்ணீர் கூட ஊற்ற வில்லை ஆனால் செடி எப்படி புயல் மழையை தாங்கி நிற்கிறது என்று கேட்க ! அதற்கு அவர் சொன்னார் ! நீ எல்லாம் அதற்கு கொடுத்தால் அது சுகமாக வேர் விடாமல் அப்படியே இருந்து விட்டது.

நான் வைத்த செடி நான் நீர் ஊற்றாததால் உயிர் வாழ நிலத்தில் வேர் ஊன்றி நன்கு வளர்ந்து விட்டது!

இன்றைய இளைஞர்கள் வாழ்க்கையும் அப்படித்தான் என்றார்.



**மித்ரா டைம்ஸ் நிருபருக்கு தமிழக ஆளுநர் வழங்கிய விருது!**

சென்னையில் நடைபெற்ற "The battles of panchalankuruchi" (ஆங்கிலம், தமிழ், இந்தி) புத்தக வெளியீட்டு விழாவில் தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அதனை செம்மையாக்கிய நமது மித்ரா டைம்ஸ் நிருபர் திரு.செந்தில் கோவிந்தசாமி அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

## திருவாரூர், கும்பகோணம் ரெயில் நிலையங்கள் உள்பட தமிழ்நாட்டில் 10 ஆர்.எம்.எஸ். அலுவலகங்கள் டிசம்பர் 7ந் தேதி முதல் மூடல்

திருவாரூர். கும்பகோ ணம் ரெயில் நிலையங் கள் உள்பட தமிழ்நாட் டில் 10 ஆர்.எம்.எஸ். அலுவலகங்கள் டிச 7ந்தேதி முதல் மூடப்பட உள்ள தால் தபால் பட்டுவாடா தாமதமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் இருந்து வரும் கடிதங்களை, மக்களுக்கு கொண்டு செல்லும் பணியில் ஆர்.எம்.எஸ். (ரெயில்வே மெயில் சர்வீஸ்) அலுவலகங் கள் ஈடுபட்டு வருகின்றன. செல்போன் பயன்பாடு அதிக ரித்து வந்தபோதிலும், இன்ன மும்கிராமப்புறங்களில்தபால் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக கருதப்படு கிறது. விரைவு தபால்கள், பதிவு தபால்கள், சாதாரண கடிதங்கள், பார்சல்கள், மணி யார்டர்கள் பட்டுவாடா தபால் துறை மூலமாகவே நடந்து வருகிறது. ஆனால் தபால் பட்டுவாடாவில் அவ் வப்போது ஏற்படும் காலதாம தம்காரணமாகபொதுமக்கள்

தனியார் கூரியர் நிறுவனங் களை நாடி செல்லுகிற நிலை யும் ஏற்படுகிறது. 64 அலுவலகங்கள் மூடல் தனியாருக்கு நிகராக அரசுத் துறையையும் தொழில்நுட்ப ரீதியில் பலப்படுத்தவேண்டிய கட்டாயமும் உள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக தமிழகத்தில் ஏராளமான ஆர்.எம்.எஸ். அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளது. இதற்கு தபால் பட்டு வாடா காலதாமமும் மிக முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. இந்தநிலையில் சீர மைப்பு என்ற பெயரில் அஞ்சல்துறை இந்தியா முழுவதும் உள்ள 64 சிறிய ஆர்.எம்.எஸ். அலுவலகங்களை வருகிற 7ந்தேதி முதல் மூட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.அந்த வகையில் தமிழ கத்தில் திருச்சி ஆர்.எம்.எஸ். கோட்டத்தில் கரூர், புதுக் கோட்டை, கும்பகோணம், திருவாரூர், திண்டிவனம் ஆகிய ஆர்.எம்.எஸ். அலுவல கங்களும், கோவை ஆர்.எம். எஸ். கோட்டத்தில் ஊட்டி, பொள்ளாச்சி, தர்மபுரி ஆகிய ஆர்.எம். எஸ். அலுவலகங்களும், மதுரை ஆர்.எம்.எஸ் கோட்டத்தில் பரமக்குடி ஆர்.எம்.எஸ். அலுவலகம், சென்னை ஆர்.எம். எஸ். கோட்டத்தில் அரக்கோணம் ஆர்.எம்.எஸ். அலுவலகம் என்று 10 ஆர்.எம்.எஸ். அலுவலகங்கள் வருகிற 7ந்தேதி முதல் மூடப்பட உள்ளன.

இங்கு பணியாற்றும் ஊழியர்கள் அருகே உள்ள ஆர்.எம். எஸ். அலுவலகத்துக்கு பணி யிடமாற்றம் செய்யப்பட உள்ளதாக அஞ்சல்துறை ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இதனால் அங்குபணியாற்றும் 300க்கும் மேற்பட்ட ஊழி யர்கள் தங்கள் பணியிடத்தை விட்டு நீண்ட தூரம் சென்று பணியாற்ற வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகி உள்ளனர். இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலையின்றி அலையும் போது புதிய வேலை வாய்ப்பு களை உருவாக்காமல், இருக் கும் வேலையை பறித்து அலுவலகங்களை மூடுவது ஒரு அலுவலகத்தை மற்றொரு அலுவலகத்துடன் இணைப்பது போன்ற செயலுக்கு அஞ்சல்துறை ஊழியர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

– பா.செந்தில்ராஜ், கும்பகோணம்

KRM 99 DELIGHTS






NORTH PAVER AREA



DINNING



RECEPTION



HALL



BED ROOM






**CONTACT : 9003 454 454**

**AMENITIES**

- Gym
- Spa
- Beauty Parlor
- Restaurant
- Party Hall Event Booking
- Boating Restaurant
- 99 Kitchen
- International Party Clubs and PUB
- Indoor Games
- Yoga Space
- Lake View
- Boating
- Fishing
- HomeTheaters
- Association Room
- Eco Tourisms
- Multipurpose hall
- Conference Room
- Business Motivation Hall
- Covered Car parking
- Power Backup24x7
- STP 24x7
- Stand by Motors and Pump
- Johnson Lift 15nosCapacity







MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 December 2024



தொழிலதிபர் திரு.சைலேந்தர் அவர்களின் பிறந்தநாளில் மித்ரா டைம்ஸ் ஆசிரியரும் கே.ஆர்.எம். குழும நிறுவனங்களின் மேலாண்மை இயக்குனருமான திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் பங்கு கொண்டு வாழ்த்தினார். உடன் தொழிலதிபர்கள் ராதா எக்ஸ்போர்ட்ஸ் திரு.கிருஷ்ணன், திரு.ஸ்ரீதர், மூத்த வழக்கறிஞர் எம்.பி. நாதன் ஆகியோர் இருந்தனர்



மித்ரா டைம்ஸ் ஆசிரியர் எம் எஸ் மூர்த்தி அவர்கள் கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயில் சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தார். உடன் ஏ.டி.எஸ்.பி (ஓய்வு)திரு.கண்ணன், ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி சி.இ.ஓ.திரு. முனிரத்தினம், திரு.சித்திக் (வடசென்னை மாவட்ட தி.மு.க. அயலக அணி தலைவர்) உடன் உள்ளனர்.



புது டெல்லி சென்ற போது இந்தியா கேட் முன்பாக நண்பர்களுடன் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி.

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY